


மருந்து கடை ஒன்றிற்குச் சென்றிருந்தேன். முதல் வரிசை முழுக்க, கடையின் அகல முழுவதையும் அடைத்துக் கொண்டிருக்க, நான் பின் வரிசை மனிதனாக நின்றேன். கடையிலோ உரிமையாளர் மட்டுமே (அப்படித்தான் தெரிந்தார்) இருந்தார். ஊகும்! காத்திருந்து கட்டுபடியாகாது, அடுத்த கடைதான் என்று மெல்ல நான் நழுவப் பார்த்த வேளையில் சார் ஒரு நிமிஷம் வந்துட்டேன் என்றார் என்னைப் பார்த்து ஒரு புன்னகைக் கலப்போடு. அதன் பிறகு நான் காத்திருந்தது ஏழு நிமிடங்களுக்கு மேல். அந்தப் புன்னகை அந்த அக்கறை, அந்த பண்பு என்னை அப்படியே கட்டிப் போட்டுவிட்டன.

வழக்கமான மருந்துக் கடைக்காரர் போல் இன்றி. ரொம்பவும் சுவாரசியமான நபராக இருக்கிறாரே என்று ஒருநாள் பேச்சுக் கொடுத்தேன்.

வாடிக்கையாளர்களை நன்கு மதிக்கிறீர்கள் அன்று நீங்கள் சொன்ன அந்த ஒரு நிமிடத்தை மறக்க மாட்டேன். சிரித்துவிட்டுச் சொன்னார். “ஓ! அதுவா? நான் எல்லாரிடமும் கடைப்பிடிக்கிற பாணி அது. அந்த ஒரு வாக்கியம் எல்லோரையும் கட்டிப் போட்டுவிடும்.

ஒரு வாடிக்கையாளர் என் ஊழியர்மீது புகார் செய்தால் ஊழியரை அவர்முன் கண்டிப்பேன். என் ஆள்மீது தப்பே இருக்காது.

ஆனாலும், சத்தம் போடுவேன். அவர் போனபிறகு ‘‘மனசுல வச்சுக்காதே! அவருக்காக அப்படிச் சொன்னேன். அவர் உன் முதலாளிக்கே முதலாளி தெரியுமா? என்பேன் உங்களுக்கு கர்சன்பாய் படேலைத் தெரியுமல்லவா?

தெரியும். வாஷிங்பவுடர் நிர்மாவின் அதிபர்.

ஆமா. அவரேதான். பெரிய நிர்வாகப் படிப்பெல்லாம் படித்தவரில்லர். ஆனால் அவர் சொல்வாராம். வாடிக்கையாளர்கள் என்பவர்கள் மூன்று வகையினர். முதலாமவர்கள் நம்மிடமிருந்து விலகிப் போனவர்கள். இவர்கள் ஏன் விலகினார்கள் என்று ஆராய்ந்தால் நல்ல தீர்வுகள், விடைகள் கிடைக்கும். அடுத்தவர்கள் நம்முடன் இருப்பவர்கள். இவர்களை எப்போதும் தக்க வைத்துக் கொள்வதில் குறிப்பாக இருக்க வேண்டும். இவர்கள் நம்மிடம் இருக்கிறார்கள் என்பதால் நமக்கு ஆணவம், அலட்சியம் வந்து விடக் கூடாது. இது வந்தால் நம்மிடமிருந்து விலகி விடுவார்கள். மூன்றாமவர்கள், இனி வரப் போகிறவர்கள். இவர்கள் மீது அதிகமாகக் கவனம் செலுத்த வேண்டும். இவர்களை எப்படிக் கவரலாம், எப்படி இழுத்துப் போடலாம் என்பதில் நாம் கவனம் செலுத்த வேண்டும் என்பாராம். நான் நிறைய மாறிவிட்டேன். இந்தப் பகுதியில் 60 மருந்துக் கடைகள் இருக்கு. ஆனா, நாங்கதான் அதிக வியாபாரம் பண்றோம். (ஓகோ! அப்படியா சேதி?) இதுக்குக் காரணம் என்னன்னா வாடிக்கையாளர்கள் பற்றிய என் பார்வைகளை மாற்றிக் கொண்டதுதான்’’
எப்படி?

நம்ம ஆளுங்க வாடிக்கையாளர்களை விரோதிகள் மாதிரிப் பார்க்குறாங்க. ஏதோ நம்ம கடையில நுழைஞ்சு கொள்ளையடிக்க வந்தவர்களைப் போலக் நடத்துகிறார்கள். அப்புறம் எப்படி வளர முடியும் தொழில்ல?

ஏதோ ஜோக் சொன்ன மாதிரி விழுந்து விழுந்து சிரித்தார் அந்த மருந்துக் கடைக்காரர்.




“எனக்கு எல்லாம் இருக்கு; இதுக்கு மேல ஒண்ணும் தேவையில்லை. அப்புறம் நான் ஏன் அலட்டிக்கணும்?” என்று வாழ்வின் மிக உயரிய நிலையைத் தொட்டவர்களைப் போல சிலர் கேட்பது எனக்கு வியப்பைத் தருகிறது.

600 கோடி ரூபாய்க்கு வருட வர்த்தகம் செய்யும் ஒரு மிகப்பெரிய தமிழகத் தொழிலதிபரைக் கேட்டேன். “என்ன, மன நிறைவுதானே?”
“நிச்சயம் நிறைவுதான். ஆனாலும் இதோடு திருப்தியடைந்துவிட முடியுமா? அடுத்த இலக்கை நிர்ணயித்து அதை நோக்கி நகர ஆரம்பித்தாயிற்று.”

“இன்னும் வளரவேண்டும்தான். ஆனால் இதற்கு எல்லைதான் என்ன?”
“ஒரு தொழிலில் திருப்தி அடைந்துவிடுவது என்பது தேக்கம் அடைவதற்குச் சமம். தேக்கம் வந்துவிட்டால் அது சரிவின் ஆரம்பம் என்பேன்.

தொடர்ந்து வளர்ந்து கொண்டே இருப்பதில் பல நன்மைகள் இருக்கின்றன. அம்பானி சகோதரர்களிடம் கேட்டுப்பாருங்களேன், திருப்திதானே என்று! இன்னும் வளர்ந்தால் எத்தனையோ பேருக்கு நேரடி வேலை வாய்ப்புகளும், மறைமுக வேலை வாய்ப்புகளும் தர என் நிறுவனம் காரணமாக இருக்குமே!”
இப்படி அவர் மண்டைப் போடாகப் போட்ட பிறகு ஆசைதான் துன்பங்களுக்குக் காரணம் என்கிற புத்தரின் போதனையையும், ‘போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து’ என்கிற நம்

சான்றோரின் வாக்கையும் வைத்து இவரை வாதத்தில் வென்றுவிட முடியும் என்கிற நம்பிக்கை எனக்குப் போய்விட்டது. 'உனக்கும் கீழே உள்ளவர் கோடி நினைத்துப் பார்த்து நிம்மதி நாடு' என்கிற பாடல் வரிகள் 60களில் நன்கு எடுப்பட்டன. இன்று 'உனக்கு மேலே உள்ளவர் கோடி; நினைத்துப் பார்த்து நீயும் உயரு' என்று புதுக் கவிதை பாட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது.

ஒகேனக்கலில் பரிசல்காரர்கள் நீரோட்டத்தை எதிர்த்து திறமையாகப் பரிசலை நகர்த்துகிறார்கள். வேகமான நீரோட்டத்திற்கு எதிராக ஒரு கைத் துடுப்பு என்ன பெரிதாகச் செய்து விடமுடியும்?

ஆனாலும் மெல்ல, அழகாக முன்னேறுகிறார்கள். இலக்கில் சரியாகக் கொண்டுபோய்ச் சேர்க்கிறார்கள். பிறகுதான் வியர்வையைத் துடைக்கிறார்கள். இப்படி நீரோட்டத்திற்கு எதிராகத் துடுப்புப் போடுவதை நிறுத்திவிட்டு சாவகாசமாக வியர்வையைத் துடைத்தால் நாம் எங்கே கொண்டு போய்த் தள்ளப்படுவோம் என்று சிந்தித்துப் பார்த்தேன்.

வாழ்விலும் இதேதான். போட்டிமயத்தில் எவ்வளவு முன்னதாகப் போனாலும் நூறாவது ஆளாக ஆகிவிடுகிற நாம், நம் போட்டி உணர்வையும் வளர்ச்சியில் காட்டும் தாகத்தையும் திருப்தியடைந்த நிலையில் ஒதுக்கிவைத்தால் நாம் எங்கே கொண்டுபோய் நிறுத்தப்படுவோம் என்று எண்ணிப் பாருங்கள். வளர்ச்சியில் தாகம் காட்டாத வரை இருக்கிற இடத்தைக் காப்பாற்றிக் கொள்வதே கடினமாகிவிடும். நாளும் படிப்படியான முன்னேற்றம். அல்லது அங்குல முன்னேற்ற மேனும். இதுதான் இந்த நிமிடத்திற்கு வேண்டிய முக்கியச் சிந்தனை.

நீங்கள் ஓர் ஒரு நிமிடச் சாதனையாளர்

லேனா தமிழ்வாணன்




கொழும்பு நகரில் ஒரு மையமான இடத்தில் ஒரு கடைத்தெரு. அது ஒரு மின் பொருள்களுக்கான கடை. ஓரளவு கூட்டம். கல்லாவில் முதலாளி. எதிர் இருக்கையில் நான். கடை உரிமையாளர் என் நண்பர் என்பதால் காணப் போயிருந்தேன்.

ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது.
''ஹலோ''

சட்டென்று சூடான நண்பர் 'ஏய் வைடி போனை வியாபார நேரத்தில் கொஞ்சுற பெரிசா'' பட்டென்று தொலைபேசியைச் சாத்தினார்.

என்ன பேசியிருப்பார் என்பது நமக்குப் பிடிபடாவிட்டாலும்கூட, யார் பேசினார்கள் என்பது பச்சைக் குழந்தைக்கும் புரிந்திருக்கும். திரைப்பட ஷூட்டிங் மாதிரி கற்பனை செய்து கொள்ளுங்கள். காட்சி கட். அடுத்த காட்சிக் களம். இதே மின்பொருள் விற்பனையாளரின் வீடு. நாள் ஞாயிறு. மதியம் ஒரு மணி இருக்கும். இங்கேயும் நான். நண்பர் லுங்கியில். மதிய உணவு உண்ண வந்த விருந்தினனாக நான். அடுப்படியிலிருந்து சொதியின் குருமா மணம்.
இங்கும் ஒரு தொலைபேசி அழைப்பு. நண்பர் எடுக்கிறார்.
''யார் பேசுறீங்க?''

‘‘வைங்க சார் போனை. ஞாயிற்றுக் கிழமை கூடவா பிசினஸ் பேசணும்? மனுஷனை நிம்மதியா இருக்க விடுங்க சார்’’

‘‘சார் எவ்வளவு பெரிய பிசினசா வேணும்னாலும் இருக்கட்டும். நாளைக்குப் பேசுங்க. இன்னைக்கு வேணாம்.’’ நண்பர் பட்டென்று சாத்தினார் தொலைபேசியை.
தொழில் செய்யும் நேரத்தில் இவரால் ஒரு சிறந்த வியாபாரியாக இருக்க முடிந்ததே தவிர, நல்ல கணவராக இருக்க முடியவில்லை.

அதேபோல், குடும்பத் தலைவராக இருக்கும் நேரத்தில் ஒரு நல்ல வியாபாரியாக இருக்க முடியவில்லை.
அந்தந்த நேரத்தில் அது அது முக்கியம் என்கிற இவரது கொள்கை வரவேற்கத்தக்கதே! ஆனால் இந்த விஷயத்தில் இப்படி ஓர் உறுதிப்பாடு தேவையா என்ன?

என் நண்பரின் மனைவி, தம் கணவரைப்பற்றி இப்படிச் சொல்வார். ‘‘அவர் உடுப்பை (காவல்துறை) மாட்டிவிட்டால் ரொம்பக் கண்டிப்பான மனுஷனா ஆயிடுறார். எனக்கே பயம்மாயிடும்னா என் புள்ளைகளைப் பத்தி கேக்கணுமா?’’
ஏனய்யா காவல்துறை நண்பரே, உடுப்பை மாட்டிக்கிட்டா கணவன், தந்தைங்கிற உறவை உதாசீனப்படுத்தணுமா என்ன?
வாழ்வில் பலருக்கும் பலவிதப் பொறுப்புகள் உண்டு. ஒன்றை ஏற்றால் மற்றவற்றை உதறிவிட வேண்டும் என்பதில்லை. எந்தப் பொறுப்பை ஏற்றிருந்தாலும் ஒரு நிமிடமாவது உங்களுக்குள் உள்ள அந்த மாற்றுப் பொறுப்பையும் சரிவர எண்ணிப் பார்த்து, அந்த உலகத்திற்குச் சென்று, சூழ்நிலை உணர்ந்து கடமையாற்றுங்கள். உங்கள் சாதனைகள் தொடர்வதற்கு இதுவும் ஒரு வழிதான்! .




ஒரு மிகச் சிறந்த வெற்றியாளரிடம் கற்றுக் கொண்டதை உங்களிடம் பகிர்ந்து கொள்கிறேன். மேசையில் ஒரு நோட்டு ஒரு பென்சில், இவற்றின் உதவியுடன் சாதிக்கிறார்.
ஒரு தொலைபேசி வந்ததும் உடனே பென்சிலைக் கையில் எடுத்துக் கொள்கிறார். பேசியவர் சொன்னதைக் கையோடு குறித்தார். வீட்டிற்கு உடனே லைன் போடச் சொல்லி, ''நம்ம செந்திலுக்குக் குழந்தை பிறந்திருக் காம்மா! சொல்லச் சொன்னான். சந்தோஷம்னு சொன்னேன். வச்சிட்டா?'' என்றார். அடுத்து ஒரு தொலைபேசி. உடனே இவர் கையோடு கணக்காளரைக் கூப்பிட்டு, ''அந்த செக்கைக் கட்டாதப்பா'' என்றார். சற்று நேரத்திற்கெல்லாம் ஒரு பார்வையாளர், ஏதோ இவரது நிறுவனம் பற்றி ஒரு புகார். ''அப்படியா? சரி! கவனிக்கிறேன்'' என்றவர், உடனே ஏதோ குறிக்கிறார். உடனே தொலைபேசியை எடுத்து ''என்னப்பா! நம்ம தயாரிப்புப் பத்திப் புகார் வருது நாளைக்குக் காலையில 11 மணிக்கு நம்ம 'கிரீவியன்ஸ் மீட்டிங்'குக்கு ஏற்பாடு பண்ணிடு'' என்கிறார்.

''எதையும் கையோடு செய்கிறீர்கள்'' என்றேன், பாராட்டாக. ''நீங்கதான் பாக்குறீங்கள்ல! சில மணி நேரத்திற்குள் நூறு விஷயங்கள் நடக்கின்றன. அவ்வளவையும் ஞாபகத்தில் வச்சுக்க முடியுமா? ஒரு நிகழ்வின் சங்கிலித் தொடராகப் பல விஷயங்கள் நடக்க வேண்டியிருக்கின்றன. அதனுடைய ஆரம்ப வேலையைத்

தட்டிவிட்டு விட்டால் அது பாட்டுக்கு நடக்க ஆரம்பித்துவிடும் என்று நம்புகிறவன் நான்.
ஒருமுறை என் சகலை சொன்ன விஷயத்தை உடனே என் மனைவியிடம் சொல்லாமல் போக, வீட்டில் பெரிய பிரச்னையாகி விட்டது. அப்புறம் சொல்லலாம்; வீட்டுக்குப் போய்ப் பார்த்துக்கலாம் என்கிறதிலெல்லாம் எனக்கு நம்பிக்கை கிடையாது. அப்படியே மறந்து போகும்.

அந்த நிமிடமே செய்தியை அடுத்தவரிடம் ஒப்படைத்துவிடுவேன். நம்மிடம் உள்ள விஷயங்கள் நெருப்புத் துண்டுகள் மாதிரி. கையோடு கை மாற்றிவிட வேண்டும்'' என்று வெற்றியூரின் முகவரி ஒன்றைச் சுட்டிக் காட்டினார் அந்தச் சாதனையாளர். Then and There என்று இதனைச் சுருக்கமான விதியாக மேலை நாடுகளில் குறிப்பிடுகிறார்கள். இந்த நிமிடமே இப்போதே என்று நாமும் இந்த விதியைப் பின்பற்றினால் சாதனையூருக்கு ஒரு புறவழிச் சாலை கிடைத்த மாதிரிதான்!.




. அக்கா வீட்டில் விசேஷம். இதற்கு எந்த வகையிலாவது உதவ நினைக்கிறார் தங்கை. முதலில் தம் கணவரிடம் சற்றுப் பணஉதவி செய்யச் சொல்கிறார். கிடைக்கிறது. பிறகு விசேஷம் குறித்த சில பொருள்களை வாங்க ''வாகனத்துடன் வாங்க'' என்கிறார்.

பல்லைக் கடித்துக்கொண்டு உடன் வருகிறார், அந்த நேரப் பற்றாக்குறை கணவர். ஒரு குறிப்பிட்ட பொருளைத்தேடி அலையோ அலை என்று அலைகிறார்கள். நேரமோ பறக்கிறது. கணவருக்கு அலுவலகத்திலிருந்து ஏதோ நெருக்கடி அழைப்பு. எரிச்சலின் விகிதாசாரம் எகிறுகிறது. எல்லாம் முடிந்த பின் மனைவியை வீட்டில் இறக்கி விட்ட நேரத்தில், ''இன்னைக்கு உன்னால் மூணு மணிநேரம் வேஸ்ட்'' என்கிறார். அவ்வளவுதான். இவ்வளவு நேரம் ஒதுக்கி, உதவிய அத்தனையும் வீணாகும்படி இந்த நான்கு வார்த்தைகள் வேட்டு வைத்துவிட்டன.
எரிச்சல் வரும் வேளையில், இவ்வளவு நேரம் பொறுமையாக இருந்த நாம் எந்த ஒன்றையும் எதிர்மறையாகப் பேசிவிடக்கூடாது. பேசினால், இதுவரை எடுத்த நல்ல பெயர் அனைத்தும் வீண் என்று ஒரே ஒரு நிமிடம் சிந்தித்துப் பார்த்தால் போதும்! ஆம்! அந்த ஒரு நிமிடம் உங்களை அடக்குங்கள். உணர்ச்சியைக் கட்டுப்படுத்தி அறிவிற்கு வேலை கொடுங்கள். மனைவிக்காகச் சில மணிநேரம் அலைந்துவிட்டு, இதனால் கிடைக்க இருந்த நற்பெயரை ஒரே நிமிடத்தில் கெடுத்துக் கொண்ட அறியாமைக் கணவரை விடுங்கள். எத்துணையோ ஆண்டுத் தொழில் தொடர்பை; பல்லாண்டுக் கால நட்பை; இரத்த உறவை; அருமையான பெருமைக்குரிய பழக்கத்தை ஒரே நிமிடத்தில் கெடுத்துக்கொள் வது எவ்வளவு வேதனையான விஷயம்!

எஸ்.பி.பாலசுப்பிரமணியத்தின் நிகழ்ச் சியை ஜெயா டி.வி.யில் இயன்றபோதெல்லாம் பார்க்கிறேன். எஸ்.பி.பி. ஓர் இசை மேதை. ஆனால் இவருடன் பாடுபவர்களோ கற்றுக் குட்டிகள். மிகச் சுலபமாக இவர்களைக் குறை சொல்லிவிட முடியும். ஆனால் பூக்களுக்கு வலிக்காதபடி தேனெடுக்கிற தேனீயைப் போல, இந்தக் குட்டீஸ்களின் இசைக் குறைகளை என்ன மாய்ச் சுட்டிக்காட்டுகிறார் இந்த எஸ்.பி.பி. கற்றுக்கொள்ள வேண்டும் இவரிடம்.

நம்மைச் சுற்றியிருப்பவர்களின் குறைகளைச் சுட்டிக்காட்ட, அவர்கள் மீது கோபப்பட நமக்கு ஆயிரம் காரணங்கள் இருக்கலாம். உணர்த்துவதுதான் நம் நோக் கம் என்றால், காயப்படுத்த நமக்கு உரிமை இல்லை. காயப்படுத்தாமல் உணர்த்த என்ன வழி என்று சிந்திக்க ஒரு நிமிடம் மட்டும் செலவழியுங்கள் போதும். உங்கள் நோக்கமும் நிறைவேறிவிட்டது. பலனும் பிரமாதமாக இருக்கும்.

ஒரு பொது இடத்தில் சில்லறை விழும் சப்தம் கேட்கிறது. நம்முடையதோ என்று எடுக்கத் தோன்றுகிறது. சேச்சே! என் னுடையதில்லை என்பது புரிந்துவிட்டது. யார் காசோ? நாம் ஏன் தொட வேண்டும்? யாருடையது இது? அவருக்குச் சுட்டிக் காட்டுவோம்' என்றெல்லாம் ஓடுகிற ஒரு நிமிட நினைப்புதான் ஒருவரது நேர்மையை நிர்ணயிக்கும் முக்கியமான நேரம். அந்த ஒரு நிமிடம் கவனமாகவும் உறுதியாகவும் இருந்துவிட்டால், நாம் இவ்வளவு காலமாகக் காத்துவந்த நம் நேர்மைக்குப் பெருமை!




தமிழக வீட்டு வசதி வாரியப் பொறியாளர் ஒருவருடன் பேசிக் கொண்டிருந்தேன். வீட்டு மனைகளுக்கு விளம்பரம் கொடுத்து விண்ணப்பம் வரவேற்கிறார்கள் அல்லவா? இதற்கான விண்ணப்பங்களுள் 68 சதவிகிதம் கடைசி நிமிடங்களில்தான்

வருகின்றனவாம். ஆரம்ப நாள்களில் பதிவு செய்யக் கூட்டமே இருப்பதில்லையாம். முதல் சில தினங்களில் இரண்டு சதவிகித விண்ணப்பங்களே வருகின்றனவாம்.

கடைசி நிமிடத்தில் விண்ணப்பங்களில் கோளாறுகளைச் செய்துவிட்டு வாய்ப்பை இழப்பவர்களின் சதவிகிதம் 15க்கும் மேலேயாம். நாம் கடைசி நிமிட மனிதர்கள்!
ஓட்டுநர் உரிமத்தையோ, பாஸ்போர்ட்டையோ ஒருவாரம் இருக்கும்போதே புதுப்பிக்க விண்ணப்பித்துவிட்டால் சிக்கல் இல்லை. கடைசி நிமிடம் விண்ணப்பிக்கப் போனால் மகாத் தலைவலி!

ஆனால் நம்மவர்கள், நாளிருக்கிறது நாளிருக்கிறது என்ற எண்ணத்தில் வீணான சிக்கல்களுக்கு ஆளாகிறார்கள். காலவிரயம், பொருள்விரயத்துடன், டென்ஷன் வேறு.
என் தங்கையின் பெண் பிரியா, கணினி படித்து வேலை வேட்டையில், ''பிரியா நந்தம்பாக்கத்தில் Job Fare சனிக்கிழமை முதல்நாளே போயிடு. ஞாயிற்றுக்கிழமை ஏகப்பட்ட கூட்டம் வரும்.''

''சனிக்கிழமை சீக்கிரமே போனேன். கூட்டமே இல்லை. நான் நூறாவது ஆள். சூப்பர் யோசனை மாமா'' என்று மகிழ்ந்தாள். நாம் கடைசி நிமிட மனிதர்கள்!

ஊருக்குப் புறப்படுகிறோம். இரயில் இரவு 9.30க்கு. பதினைந்து நிமிடம் முன்னதாக இரயில் நிலையத்தில் இருக்கவேண்டும் என்கிற நினைப்போடு செயல்படுகிறவர்கள் எத்தனை பேர்? பயண நேரத்தைக் கணக்கிட்டு அதற்கு ஆகும் நேரத்தைவிடப் பதினைந்து நிமிடம் கூடுதலாக ஒதுக்குகிறவர்கள் எத்தனை பேர்? புறப்படுமுன் சில வேலைகள். இவற்றை முடித்துவிட்டு ஊருக்கு எடுத்து வைப்போம் என்கிற கோளாறான நினைப்பை எப்போது கைவிடப் போவதாக உத்தேசம்?

முதல் இலக்கு, இரயிலுக்கு நேரத்திற்குப் புறப்படுவது. அதற்குத் தயாராகிவிட்டு அதன்பிறகு, ஹாயாக, இருக்கிற வேலைகளை முடிப்போம் என்கிற புத்திசாலித்தனமான முடிவிற்கு வருகிறவர்கள் எத்துணைப் பேர்?

எதிலெதிலோ இறங்கிவிட்டு, கடைசி நிமிடப் பரபரப்பில் முக்கியமானவற்றை விட்டுவிட்டு, டிக்கெட்டை எடுத்து வைக்க மறந்துவிட்டேன்; அழைப்பை மறந்துவிட்டேன்; அட்ரஸ் எடுத்து வைக்க மறந்துவிட்டேன் என அசடு வழிபவர்களும், அவதிப்படும் மனிதர்களும் எத்தனை பேர்! நாம் கடைசி நிமிட மனிதர்கள்! நாம் இப்படிப்பட்ட கடைசி நிமிட மனிதர்கள் பட்டியலிலிருந்து ஒதுங்கி நின்றாலே போதும் சாதனையாளர்கள்தாம்!.




காந்திஜியிடம் ஹென்றி டேவிட் தோரோ என்கிற உலகறிந்த இயற்கைவாதிக்கு நட்பு மட்டுமல்ல, பெருமதிப்பும் இருந்தது. காந்திஜிதான் என் குரு என்று ஏற்றுக்கொண்டவர். முதல் சந்திப்பில் காந்திஜி சில நிமிடங்களிலேயே தம்மை அசத்திவிட்டதாக இவர் குறிப்பிடுகிறார்.

காந்திஜி என்ன பேசி, எப்படி நடந்துகொண்டு அசத்தினார் என்கிற விவரம் நமக்கு கிடைத்தபாடில்லை.

உங்களாலும் ஒரு நிமிடத்தில் எதிராளியை அசத்தமுடியும்_ நம்புங்கள். முதல் நிமிடமே எதிரியைச் சாய்க்கும் மைக் டைசனாகுங்கள்.

''இவர்தான் கவிஞர் பா.விஜய்'' என்று உங்களுக்கு அறிமுகப்படுத்துகிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்களேன். ''உங்களோட, 'ஒவ்வொரு பூக்களுமே''' என்கிற அறுதப் பழசுப் பாடலைப் பற்றி ஆரம்பிக்காதீர்கள். கேட்டுப் புளித்துப் போயிருக்கும் இவருக்கு. 'நான் அவனில்லை'யில் 'ஏனெனக்கு' என்கிற ஒரு வார்த்தையை வச்சுக்கிட்டு என்னமா ஜாலம் பண்ணியிருக்கீங்க கவிஞர்!'' என்று ஆரம்பியுங்கள். அசந்து போவார் மனிதர்.

நண்பரால் கடந்த நிமிடம் அறிமுகப்படுத்தப்பட்ட ஒருவரிடம், ''என்ன பேர்னு சொன்னீங்க?'' என்று கேட்காதீர்கள். அவரது நன்மதிப்பிலிருந்து சட்டென்று கீழே விழுவீர்கள். அரசியல்வாதிகள், நடிகர்கள் மீது விழுகிற பளீர் பளீர் ஃபிளாஷ்போல் ஒரு நிகழ்வில் பலப் பலர் அறிமுகமாகிறபோது நினைவுப் பகுதியைப் பட்டை தீட்டிக் கொள்ளுங்கள். பல நிமிடங்களா பேசப் போகிறோம்? இல்லை. ஒரு நிமிடத்திற்குள் இவள் உள்ளத்தை எப்படிக் கொள்ளை கொள்ளலாம் என்று ஓர் இளம்பெண்ணைக் கவர நினைக்கிற இளைஞனைப் போல் மாறுங்கள்.

ஒரு நிமிட உரையாடலில் நம் அசத்தல் மட்டுமே நோக்கமாக இருக்கவேண்டும். நம்ம கதைகள், வம்பளப்புகளெல்லாம் வேண்டவே வேண்டாம். உங்களை அறிமுகப்படுத்தியவரிடம் உங்களைப் பற்றி அவரே விரிவாகக் கேட்டுக் கொள்வார். நிச்சயம்!

சில தொடர்புகள், அறிமுகங்கள் யாரை எந்த உயரத்தில் கொண்டுபோய் நிறுத்துமோ தெரியாது.




வாய்ப்புகள் இரண்டு வகை. மீண்டும் வாய்க்கும் வாய்ப்பு. ஒரே ஒரு முறை மட்டும் வாய்க்கும் வாய்ப்பு.
வாய்ப்புகளை இப்படிப் பிரித்து அறிந்து இனம் காணத் தெரியாதவர்கள் எல்லாவற்றையும் ஒன்றுபோல் எண்ணி, அரிய வாய்ப்பினையெல்லாம் நழுவவிட்டு விட்டுப் பின்னர் வருத்தப்படுகிறார்கள்.

விடிகாலை எழவேண்டிய அவசியம் சில தினங்களில் நமக்கு ஏற்படுவது உண்டு. இரயில் பிடிக்க; தேங்கிவிட்ட கடமைகளை முடிக்க; முதல் முகூர்த்தத்தில் கலந்து கொள்ள; தேர்வுக்குப் படிக்க; கடன்காரனைக் ‘காலங்காத்தால’ பிடிக்க, ஒரு பெரிய மனிதரைப் பார்த்து விண்ணப்பம் நீட்ட என்று பலருக்கும் அவசியங்கள் பல விதம்.

இவற்றுள் பெரும்பாலானவை மறுபடி வாய்க்காத வாய்ப்புகள். விட்டால் கை விட்டதுதான் என்கிற இரகங்கள்.
அலாரம் வைத்து எழ நினைக்கிறவர்கள் அதை ஏதோ குழந்தை போல் பக்கத்திலும் கக்கத்திலும் வைத்துக் கொள்கிறார்கள். தவறு. அலாரம் அடித்ததும் அதன் தலைமேல் ஏதோ நம்மீது உட்கார்ந்த கொசுவைத் தூக்கத்தில் அடிப்பது போல் பட்டென்று அடித்துவிட்டு மறுபடி தூங்க ஆரம்பித்து விடுகிறார்களே நூற்றுக்குத் தொண்ணூறு பேர்.

அலாரம் என்பது படுக்கை அறையின் வெகுமூலை எதுவோ அங்கு வைக்கப்பட வேண்டும். அலாரம் அடிப்பதை உணர்ந்து, சோம்பல் முறித்து, தட்டுத் தடுமாறி எழுந்து, நடந்து போய் அதை அணைக்க ஆகும் கால இடைவெளி சுமார் ஒரு நிமிடம்.
இந்த ஒரு நிமிடம் மிக முக்கியமானது. மனத்தை உடல் கெஞ்சும் படிப்பாவது கிடிப்பாவது? கடமையாவது மண்ணாவது? கடன்காரனாவது கிடன்காரனாவது? எல்லாமே தூக்க அரக்கனின் அடிமைகள்.

மறுபடி வந்து படுத்து, ‘இதோ! ஒரு நிமிடத்தில் எழுந்துடறேன்!’ என்று உடல் கெஞ்ச, மனமும் இதற்கு உடன்படும்.
ஒரு நிமிடமாவது? கண் திறந்தால் வழக்கமான நேரத்தை விடத் தாமதமான கண் விழிப்பு! ‘ஐயோ! பல மணி நேரம் போச்சே! போச்சே!’ என்று மனம் பதைக்க வேண்டியது தான்.
நாம் செய்ய வேண்டியதெல்லாம் ஒன்று தான்.
இரவில் என்ன நோக்கத்திற்காக அலாரம் வைக்கிறோமோ அதனால் ஏற்படும் பலன்களை நல்ல விளைவுகளைப் பற்றி கற்பனையை ஓடவிட்டு, அந்தக் காட்சிகளைக் கண்களுக்குள் ஓடவிட்டு அனுபவிக்க வேண்டும். அலாரம் அலறும் நேரம் எழுந்தே தீருவேன் என்று மனத்தில் வைராக்கியம் பதிக்க வேண்டும்.

காலை அலாரம் அடித்ததும் தளர்ந்து போயிருக்கும் இரவு நேர வைராக்கியத்தால் உடலை முறுக்கேற்ற வேண்டும்.
உலகை வெல்லும் முனைப்பில் இருப்பதால், தூக்க அரக்கனே! உனக்கு நான் மசிய மாட்டேன். கண்ணில் கண்ட காட்சிகளைக் கையகப்படுத்துவேன் என்று மனத்திற்குள் உறுதி பூண வேண்டும்.
இந்த ஒரு நிமிட உறுதிதான் உங்கள் வெற்றியின் விலாசங்களை அடையாளம் காட்டப் போகிறது!.




விருந்து ஒன்றில் ஒருவரைப் புதிதாக அறிமுகப்படுத்தியபோது இப்படிச் சொன்னார்கள்.

''இவருடைய பெரிய பலமே இவரது பிரசன்ஸ் ஆ்ஃப் மைண்ட்தான். எது கேட்டாலும் சட்டென்று சொல்லுவார். எங்கிருந்துதான் இவருக்கு சரியான பதில் மாட்டுமோ(?) தெரியாது. அபார வேகம். பெரிய முடிவுகளை எடுக்கக் கூட அதிக நேரம் எடுத்துக் கொள்ள மாட்டார். எல்லாம் டாண் டாண் முடிவுதான்.'' இன்னும் என்னென்னவோ அடுக்கிக் கொண்டே போனார்கள். எனக்கு சுவாரசியமாகப் படவில்லை.
விருந்து முடிந்து திரும்பிக் கொண்டிருந்தபோது, ''என்ன இது! அவரைப் பற்றி அவ்வளவு நன்றாக எல்லோரும் சொன்னபோது, உங்கள் ரியாக்ஷன் பெரிதாக ஒன்றுமில்லையே!''

''அவரை வியக்க முடியவில்லை. ஒத்தையா ரெட்டையா விளையாட்டு மாதிரிதான் இவரது முடிவு எல்லாம். சில விஷயங்களில் பதிலையும் முடிவையும் நன்கு அலசி ஆராய்ந்துதான் சொல்லவேண்டும். இப்படிச் செய்கிறபோதே சில கோணங்களைச் சிந்திக்காமல் விட்டுவிட்டதற்காக வருத்தப்பட வேண்டியிருக்கிறது என்றால், டக்கு டக்கு முடிவுகளைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.''

‘‘அவர் அப்படியெல்லாம் எந்த முடிவையும் தவறாக எடுத்ததாகவோ, அவர் பதிலில் தவறு நேர்ந்ததாகவோ எங்களுக்குத் தெரியவில்லை.’’

‘‘உங்களுக்குத் தெரியவில்லை என்கிறீர்கள் அல்லவா? அதைத்தான் நான் அடிக்கோடிட விரும்புகிறேன்’’ என்றேன். இதற்குப் பதில் பேசாத என் நண்பரது முகத்தைப் பார்த்தேன். ‘‘இவன் பொறாமை பிடித்தவன்’ என்று சொல்வதைப்போல் அவரது முகம் இருந்தது. உண்மை இதுவல்ல. சிந்தனை முறை (Thought Process) என்பது நபருக்கு நபர் வேறுபடலாம். சிலருக்கு இது வேகமாக நடக்கலாம். சிலருக்கு இது சாவகாசமாகத்தான் நடக்கிறது.

‘‘இவர் பட்டுன்னு முடிவெடுப்பவர்’’ என்று எவரைச் சுட்டிக் காட்டினாலும், அவருக்காக நான் இரக்கப்படுகிறேன். உங்களிடம் சட்டென்று ஒரு பெரிய தொகை கடனாகக் கேட்கப்படுகிறது. கேட்பவரோ மிக வேண்டியவர். உங்கள் முடிவை ஒரே சொல்லில் உடனே எதிர்பார்க்கிறார்.

உங்களுக்கோ முடிவு சொல்ல ஒரு நிமிடமாவது தேவை. அந்த ஒரு நிமிடத்தை எப்படி எடுத்துக் கொள்ளப்போகிறீர்கள்? உரையாடலை வளர்ப்பதன் மூலம்தான்.

‘‘என்ன ஆச்சரியம்! கேட்காதவர் நீங்க! கேக்குறீங்க!’’ என்பதுபோல் ஆரம்பித்து உரையாடலை ஒரு நிமிடமாவது நடத்துங்கள். கூடவே இவருக்குக் கொடுப்பதா இல்லையா என்று இணைச் சிந்தனையை (Parellel Thought)யும் நடத்துங்கள்.

‘‘உங்களை வடக்கே மாத்தலாம்னு பார்க்கிறேன்; ‘இறங்குங்க கீழே’, ‘வீட்டைக் காலி பண்ணுங்க’ என்பன போன்ற அதிர்ச்சி வாக்கியங்கள் எதற்கும் உடனே பிரதிபலிக்காதீர்கள். உங்களுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லையா? அந்த ஒரு நிமிட உத்தியை உடனே பயன்படுத்துங்கள். பிரமாதமான

முடிவை எடுப்பீர்கள். நிலைமையை அற்புதமாகச் சமாளிப்பீர்கள்! வென்று வெளிவருவீர்கள்!

மற்றபடி, பிரசன்ஸ் ஆ்ஃப் மைண்ட் என்கிற வெங்காயத்தையெல்லாம் அதிகம் நம்பாதீர்கள்!.




வளர முடியாதவர்களும், வளர விரும்பாதவர்களும் பேசும் தத்துவங்கள் இவை. “ஆசைக்கு ஏது சார் அளவு? ஏகமா வளர்ந்துட்டா தங்கமும் வைரமுமா தின்ன முடியும்? அதே நாலு (?) இட்டலிதானே? இருக்கிறதே போதும் எனக்கு! எதுக்காக உலகத்தையே வளைச்சுப் போட ஆசைப்படணும்?”
இந்தத் தத்துவ உதிர்ப் பாளர்கள் பரவாயில்லை என்று சொல்லுமளவிற்கு இன்னுமொரு கூட்டம் இருக்கிறது. “ரொம்ப வளர்ந்தாப் பிரச்னைதான் சார்! எந்தப் பணக்காரனாவது நிம்மதியா (!) இருக்கானா? நான் நிம்மதியா இருக்கேன். சந்தோஷமா இருக்கேன். எனக்கு என்ன குறைச்சல்?” என்று ஒருபடி மேலே போய்ப் பேசுவார்கள்.

இவர்களது திறமைகள் ஆராயப்பட வேண்டியவை.
சுயதிருப்தி அடைபவன்தான் பணக் காரர்களுள் பணக்காரன் என்பதை நம்பிக் கொண்டு, தங்கள் கை கால்களைத் தங்கள் எண்ணங்களாலேயே மானசீகமாகக் கட்டிப் போட்டுக் கொள்கிறவர்களுக்குச் சில வார்த்தைகள்.

வாலிப வயது வரை பெற் றோர் பாதுகாப்பில் உயரத்தால் _ அகலத்தால் வளர்கிறோம். இதுபோக, கல்வியால் வளர்கிறோம். இது அலைகளற்ற ஏரியில் படகு செலுத்துவது போல, பொரு ளாதாரத்தால் வளர்வது; புகழால் வளர் வது என்பது ஆர்ப்பரிக்கும் அலை கடலில் பாய்மரம் செலுத்துவதைப் போல.
இதைத்தான் நாம் எப்படித் திறம்படச் செய்கிறோம் என்று, நம் சுற்றமும் இந்த உலகமும் கூர்மையாகக் கவனிக்கின்றன.
என் ஜப்பானிய நண்பர் தாகனாவா, ஒரு காலணித் தயாரிப்பாளர். ஒரு முறை இவர் இப்படிச் சொன்னார். ‘‘எனக்கு நான் சம்பாதித்துக் கொண்டுவிட்டேன். என் தேசத்தை உயர்த்திப் பிடிப்பதற்காக இப்போது சம்பாதிக்கிறேன்.’’
சொன்னால் உடனே தெரிகிற கல்விமான். பல கல்லூரிகளின் அதிபர். ‘‘உங்கள் வளர்ச்சி திருப்தியளிக்கிறதா?’’ என்றேன். ‘‘என் நிறுவனங்களால் 3000 குடும்பங்கள் பிழைக்கின்றன. இதுதான் தலையாய திருப்தி’’ என்றார்.

நீங்கள் இன்னும் வளருங்கள். உங்கள் ஊர்க்காரர்கள் பெருமையாகச் சொல்வார்கள். ‘‘அவரு எங்க ஊர்க்காரரு. தெரியுமில்லே?’’

நீங்கள் மேலும் வளருங்கள். உங்கள் உறவினர் இப்படிச் சொல்வார். ‘‘என் ஒன்றுவிட்ட தம்பியோட மகன்தான் அவரு. தெரியுமுல்ல?’’

புகழ்க் குதிரையை வெற்றிகரமாகச் செலுத்துங்கள். செல்வாக்குக் குதிரை கூடவே ஓடி வந்து சேர்ந்துகொள்ளும். செல்வக் குதிரையை முடுக்குங்கள். அங்கீகாரக் குதிரை தானாக ஒட்டிக் கொள்ளும். நான்கையும் ஒரு தேரில் பூட்டி வெற்றிச் சாரதியாகுங்கள்.

நமக்குத் தேவைப்படுவதெல்லாம் ஓர் ஒரு நிமிடத் தீர்மானம்தான். ‘‘என்னால் வளர முடியும், நான் வளர்ந்தே ஆகவேண்டும். நான் நிச்சயம் வளர்வேன். நான் வளர்ந் தால்

என்னால் பலர் வளர்வார்கள். பலரை வளர்ப்பதால், நான் மேலும் வளர்வேன். என் வளர்ச்சி என் பது தனிமனித வளர்ச்சி அல்ல! என்னவர்களின் வளர்ச்சி! இதை அடை யாமல் விடுவ தில்லை.'' நம்மைக் கரை சேர்க்கும் வாசகங்கள் இவை!.




இரு சகோதரர்களின் சிறு கருத்து வேறுபாடுகளால், உலகத் தரவரிசைக்கு உயர்ந்த ஓர் இந்திய நிறுவனம் இரண்டாகப் பிளந்த வரலாறு உங்களுக்குத் தெரியும். சமாதானத்திற்கு முயன்ற இவர்களின் தாய், ஆரம்ப நிமிடங்களிலேயே இதைச் செய்யாமல் விட்டுவிட்டேன். இப்போது என் கையை மீறிப் போய்விட்டது. இனி முடியாது என்றாராம். தன் நெருங்கிய உறவினரிடத்தில் பிரிந்தவர்களுள் ஒருவர் எங்கோ உயர்ந்துவிட்டார். மற்றவர் என்றேனும் எண்ணிப் பார்த்திருப்பார், இணைந்திருந்தே இந்த வெற்றியை நாமும் சேர்ந்து அனுபவித்திருக்கலாமே என்று! வெளிப்படையாகச் சொல்ல கௌரவம் இடம் தராதே தவிர, நிச்சயம் இந்த உணர்வு உள்ளுக்குள் ஒரு நிமிடமாவது வந்திருக்கும்.

நம் சாதனைகளுள் பாதி நாம் பிறருடன் பராமரிக்கும் நல்லுறவைப் பராமரிப்பதிலேயே அடங்கியிருக்கிறது. உறவுகளை முறித்துக்கொள்ள வலுவான காரணம் தேவை. ஆனால், ஒன்றுமில்லாததற்கெல்லாம் பல்லாண்டு கால நட்பை,

தொடர்பை, நெருக்கத்தை மிகச் சர்வசாதாரணமாக உடைத்துப் போட்டுவிடுகிறோம்.

''நானும் பார்த்துக்கிட்டே இருக்கேன். ரொம்பத்தான் ஓவராப் போறீங்க. இனிமே என்னால பொறுத்துக்க முடியாது. எனக்குச் சேர வேண்டியதைத் தந்துடுங்க. நான் விலகிக்கிறேன்'' என்கிற வாக்கியங்களை ஓர் ஓட்டுநர் தன் முதலாளியைப் பார்த்துச் சொல்கிறார். மகன் தந்தையைப் பார்த்துச் சொல்கிறார். குடித்தனக்காரர் வீட்டுக்காரரைப் பார்த்துச் சொல்கிறார். ஒரு பங்குதாரர் தம் மற்றொரு பங்குதாரரைப் பார்த்துச் சொல்கிறார். வாசகங்களைச் சிறிது மாற்றி, மனைவிகூடக் கணவனிடத்தில் சொல்கிறார். எத்துணையோ ஆண்டு பந்தம், பல்லாண்டு நல்லுறவு ஒரு நிமிடத்தில் சிதிலமடைந்து போகிறது.

மழை சடசடவெனப் பெரிதாகப் பொழிவது இல்லை. மேகங்கள் திரள்கின்றன. கருக்கின்றன. இடி இடிக்கிறது, மின்னல்கள் வெட்டுகின்றன. சிறு தூறலுடன் மழை ஆரம்பிக்கிறது. ஓர் உறவு கெட ஆரம்பிப்பதும் இப்படித்தான்.

சிறுசிறு அறிகுறிகளால் நாம் நம்மைச் சுற்றியுள்ளவர்களால் வெறுக்கப் படுகிறோம்; புறக்கணிக்கப்படுகிறோம்; அவமானப்படுத்தப்படுகிறோம்; ஏமாற்றப்படுகிறோம் என்பது தெரியவர ஆரம்பிக்கும்.

சரி செய்யப்படவேண்டுமே இது, இந்த உறவு பலவீனப்பட்டால் அது நமக்கு நன்மை செய்யப்போவதில்லை என்கிற உணரல் தேவை. அதே நேரத்தில், சரிக்கட்டக் கிடைக்கும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

ஒரே ஒரு முறை இழைக்கப்பட்ட அநீதியையும், அவமானத்தையும் பெரிதுபடுத்தி அறுத்துக்கொண்டு ஓட எண்ணும் நாம், அவர்கள் தந்த எத்துணையோ பெருமிதக் கணங்களையும் காட்டிய அன்பையும், தந்த கௌரவத்தையும்,

செய்த நன்மைகளையும் ஒரு நிமிடம் எண்ணிப் பார்த்திருப்போமா?

இதுகூட வேண்டாம், கோபத்தையும் வீண் கௌரவத்தையும் சற்றே தள்ளி வைத்துவிட்டு, பிரிவதால் ஏற்படும் எதிர்மறை விளைவுகளைப் பற்றி எண்ணிப் பார்க்கவேனும் ஒரு நிமிடம் ஒதுக்குவோம்.




பஞ்சாபி ஜோக்ஸ் என்று சீக்கியர்களைக் கேலி செய்யும் நகைச்சுவைகள் ஏராளம். என் நண்பர் இத்தனைக்கும் ஒரு மருத்துவர். அள்ளிவிடுவார் பாருங்கள்! விழுந்து விழுந்து சிரித்தாலும் ஒரு சமூகத்தை இப்படியா கேலி செய்வது என்று பின்னர் உதிக்கும்.

ஆனால், எனக்குச் சீக்கியர்கள் மீது அளவற்ற மரியாதை உண்டு. இவர்களைப் போல் வீரமிகுந்த ஒரு சமூகத்தைக் காண்பது அரிது. இராணுவத்தில் இவர்களது எண்ணிக்கை மிக உருப்படியானது. இவர்களது உடல் வலிமையும் ஆஜானுபாகுவான தோற்றமும் அசத்தல் இரகங்கள்.

ஒரு முறை நான் பஞ்சாபில் உள்ள புனித சீக்கியக் கோயிலுக்குப் போயிருந்தபோது, ஓர் ஏ.சி. இயந்திரத்தை அப்படியே அலாக்காகத்

தூக்கிக்கொண்டு போன ஒரு சீக்கியரைப் பார்த்து மிரண்டு போனேன்.

போதும் சீக்கியப் புராணம்!

கோவைக்கு சீக்கியர் ஒருவர் லூதியானாவிலிருந்து அழைக்கப்பட்டிருந்தார். காரணம், அந்தப் பிரபலமான நூற்பாலையில் ஓர் இயந்திரம் பழுதாகி நின்றுவிட்டதுதான். நம்மவர்கள் எவ்வளவோ முயன்றார்கள். சரியும் செய்தார்கள். ஆனால் மறுபடி மறுபடி அதே தொல்லையில் சிக்கி நின்றுவிட்டது.

அந்தச் சீக்கியர் இயந்திரத்தைப் பார்வையிட்டார். பார்வையிட்ட நேரம் சரியாக ஒரு நிமிடம்தான். கையிலிருந்த சுத்தியலால் ஒரு தட்டுத் தட்டினார். 'ஊம்! இப்ப ஓட்டுங்க!' என்றார். செய்தார்கள். என்ன வியப்பு! இயந்திரம் தொடர்ந்து சரியாக ஓட ஆரம்பித்தது. சில நிமிடங்களிலேயே நடக்கும் அந்த வழக்கமான மக்கர் நிகழவில்லை.

ஆலையில் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு மகா ஆச்சரியம். கை குலுக்கி, கைதட்டித் தீர்த்து விட்டார்கள்.
நிர்வாகத்திற்கும் முதலாளிக்கும் செய்தி போனது. அவர்களும் பாராட்டுத் தெரிவித்தார்கள்.

ஆலையின் நிர்வாக இயக்குநர் கேட்டார். ''எவ்வளவு பீஸ்?''
''ஐம்பதாயிரம் கொடுங்கள்'' என்றார் அந்த சீக்கியர் சர்வ சாதாரணமாக.
''என்னது! ஐம்பதாயிரமா?'' நிர்வாக இயக்குநரின் மகிழ்ச்சி நிமிடத்தில் பறந்து போனது.
''பார்த்துக் கேளுங்க சர்தார்ஜி. ஒரு சுத்தியலை எடுத்து ஒரு தட்டுத் தட்டினீர்களாம். நீங்கள் செலவழித்த நேரம் ஒரு நிமிடம் கூட இல்லையாம். சொன்னார்கள்'' என்றார் எம்.டி.
''நீங்கள் சொல்வது உண்மைதான். நான் ஒரு தட்டுத் தட்டியதற்கோ, ஒரு நிமிடம் செலவழித்ததற்கோ இந்த பீஸ்

அல்ல. எங்கே தட்டவேண்டும் என்று எனக்குத் தெரிந்திருக்கிறது அல்லவா? அதற்குத்தான் அந்த பீஸ்'' என்றார்.
கேட்டவர் வாயடைத்துப் போனார்.

ஒரு துறையில் நாம் பெற்றிருக்கிற ஆற்றல், அனுபவம் எவ்வளவு என்பது முக்கியமல்ல. அவசியத்தின்போது அவை வெளிப்படும் தருணம் எது என்பது முக்கியம்
.
ஒரு நிறுவனத் தலைவருடன் நிர்வாகிகள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களின் கலந்தாய்வுக் கூட்டம். இதில் எழுப்பப்படும் வினாக்களுக்கும், நிலவும் சிக்கல்களுக்கும் குறுகிய நேரத்தில் தீர்வு சொல்பவர்களுக்குத்தான் கூட்டத்தில் மதிப்பு; நிறுவனத் தலைவரின் இதயத்தில் நல்லிடம். எத்தனை வருடமாகப் பணிபுரிகிறார் என்பதெல்லாம் கணக்கிலேயே வராத சமாசாரம்! அந்த நேரத்துத் தேவையை மிகக் குறுகிய நேரத்தில் பூர்த்தி செய்கிறவர்கள் தொடப் போகிற உயரங்கள் சாதாரணமானவை அல்ல. இவற்றைக் கணக்கெடுத்துக் கட்டுபடியாகாது..




உங்களுக்குத் தெரியாமல் உங்கள் பெயரில் வங்கிக் கணக்கு இருக்கிறது தெரியுமா? ஆமாம். தினமும் இதில் 1440 ரூபாயோ, 1440 ஆயிரங்களோ போடப்படுகின்றன.

இந்தப் பணத்தை எடுத்து மறுமுதலீடு செய்ய உங்களுக்கு முழு உரிமை உண்டு. ஆனால் ஒரு நிபந்தனை. இதைப் பயன்படுத்தா விட்டால் அன்று இரவே அது துடைத்து எடுக்கப்பட்டுவிடும். சே! உண்மையில் இப்படி ஒரு கணக்கு இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் தெரியுமா? நான் ஏன் இந்தத் தொகையை மறு முதலீடு செய்யாமல் கோட்டை விடுகிறேன்? நான் என்ன இளிச்ச வாயனா? அதுவாகத் துடைத்து எடுக்கப்பட ஒருக்காலும் விடுவேனா என்று கேட்கிறீர்களா?

இப்படி மனித இனம் கோட்டை விட்ட ஆயிரங்கள், இலட்சங்களுக்குக் கணக்கு வழக்கே இல்லை என்பேன். ஆம். நான் குறிப்பிடும் இந்த எண்ணிக்கை 24 மணி நேரத்தை 60 நிமிடங்களால் பெருக்கியபோது கிடைத்த ஒன்று. வீணாக்கினாலோ தவறாகச் செலவிட்டாலோ அது நமக்குக் கிடைக்காமல் போன வழித்தெடுக்கப்பட்டுவிட்ட கணக்கிற்குப் போய்விடும்.

இந்த நிமிடங்களை நன்கு பயன்படுத்திக் கொண்டாலோ அவை நம்மை முன்னேற்றப் பாதையில் கைகோர்த்து அழைத்துச் செல்லும்.

கூடுதலாகத் தூங்கி வழியும் நிமிடங்கள்; சோம்பித் திரியும் நிமிடங்கள்; பார்த்த படத்தையே திரும்பத் திரும்பப் பார்த்து வீணடித்த நிமிடங்கள்; கடமைகள் காத்திருப்பது தெரிந்தும், ‘சும்மா’ பேசிக் கொண்டிருந்த நிமிடங்கள்; அழுமூஞ்சித் தொலைக் காட்சித் தொடர்களில் தொலைத்த நிமிடங்கள் என்று இன்னும் நீட்டி முழக்கக்கூடிய நிமிடங்கள் ஆகிய வற்றையெல்லாம் ஒன்றுவிடாமல் மனசாட்சிக்கு விரோதமின்றிக் குறியுங்கள். இவற்றை ஆக்கபூர்வமாகவும் நம் வளர்ச்சிக்கெனவும், பயன்படுத்தினால் அவை நல்ல முதலீடுகளாகிவிடும். இதற்கு நிச்சயம் பலன் கிடைக்கும்.

இன்றையப் பொழுதின் பயன்மிகு நிமிடங்கள் என்று அன்றன்று இரவு ஒரு கூட்டல் போடுங்கள். சே! இவ்வளவுதானா? என்பீர்கள் நிச்சயமாய்!

'நாளை இதை அதிகப் படுத்துவேன்' என்று சபத மெடுங்கள். அதன்படி நிகழ்த்துங்கள். நீங்கள் சந்தேகமில்லாமல் ஒரு சாதனையாளர்தான்!.

---




நம்மவர்களிடம் எதையும் காசோடு சம்பந்தப்படுத்திச் சொன்னால் நன்கு எடுபடும்.

மனக்கணக்கில் நீங்கள் வல்லவரா?

''நான் அபாக்கஸ் ஆசாமி! தெரியும்ல?'' என்கிறவர்களிடம் நான் ஜகா வாங்கிக்கொள்ள விரும்புகிறேன். ''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை'' என்று அடக்கி வாசிக்கிறவர் என்றால், உடனே ஒரு கேல்குலேட்டரைத் தேடிப்பிடித்து எடுத்து அருகில் வைத்துக்கொள்ளுங்கள்.

ஆயிற்றா?

உங்களின் அல்லது உங்கள் குடும்பத்தின் மாத வருமானத்தை கால்குலேட்டரில் அழுத்திப் பதியுங்கள். உதாரணத்திற்கு உங்கள் சம்பளம் 11,000 ரூ என்று கொள்வோம். வாடகை வருமானம் ரூ.

3,400. அப்புறம் கொஞ்சம் வட்டி வருது. அது 1,200ரூபாய் சரி கூட்டுங்க. எல்லாம் 15,600ரூபாய் வருதா? இதை 30ஆல் வகுங்க. தினசரி வருமானம் கிடைச்சுட்டுதா? ரூ.520. இதை 24ஆல் வகுங்க. மணிக்கு ரூ.21.66 பைசா. இதையும் 60ஆல் வகுங்க. உங்கள் ஒரு நிமிட வருமானம் தெரிஞ்சுட்டுதா? இந்த 36 பைசாவை எப்படியும் 50 பைசாவாக ஆக்கித் தீருவேன் என்று சபதம் எடுங்கள்.
நமக்குத் தெரிந்த ஒரு பிரபல கிரிக்கெட் வீரரின் வருமானம் நிமிடத்திற்கு 115 ரூபாயாம். கால்குலேட்டரை மீண்டும் உயிர்ப்பித்து 60ஆல் + 24ஆல் + 30ஆல் + 12ஆல் பெருக்கிப் பாருங்கள். தலைசுற்றும். இவர் செஞ்சுரி அடிக்கவில்லையே என்று கவலைப்படுவதைவிட, நம் வருமானம் உயர என்ன வழி? இதற்கு நம் நேரத்தை எப்படிப் பயன்படுத்தலாம் என்று அக் கறைப் படுங்கள். இதற்கு ஒரு கணக்குப் போடுங்கள்.
ஒரு பத்து ரூபாய் நோட்டை உங்களிடம் தந்து, ‘‘இதை என் பரிசாக வைத்துக்கொள்ளுங்கள். இதைப் பர்சில் வைத்துக் கொள்வதும், கிழித்துப் போடுவதும் உங்கள் விருப்பம்’’ என்கிறேன் நான்.

‘‘எனக்கென்ன கிறுக்கா பிடித் திருக்கிறது? நான் ஏன் இதைக் கிழிக்கவேண்டும்? என்பீர்களா மாட்டீர் களா?’’
ஆனால் நிமிடங்களை, மணிகளை, வருடங்களை, வீணாக்குகிறவர்களைக் கேட்கிறேன். நீங்கள் இன்றுமட்டும் மானசீகமாகக் கிழித்துப் போட்ட ரூபாய்களைக் கணக்கிடுங்கள். 100 ரூபாய் காணாமல் போனால் பதறுகிற மனம். ஐயோ இந்தச் சாலையில் செல்ல 45 ரூபாயா என்று வயிறு எரிந்து கேட்கிற மனம், ஓட்டலில் நாம் சொகுசாகத் தின்று ஜீரணித்த மசாலா தோசையின் விலை 45 ரூபாய் என்று கேட்டதுமே வயிற்றைப் புரட்டச் செய்கிற மனம்.... ஏன் நேரத்தைச் சுக்குநூறாகக் கிழித்துப் போடுகிறபோது மட்டும் பதற மறுக்கிறது?

நேரம் என்பது ஒரு பண்டமாற்றுச் சாதனம். இதைப் போன்ற சிறந்த மூலப்பொருள் உலகில் வேறு இல்லை. இதைப் பணமாக மாற்றலாம்; பாசமாக மாற்றலாம்; வளர்ச்சியாக மாற்றலாம்;

உருப்படியான கலையாக ஆக்கலாம்; அறி வாற்றலாக மாற்றலாம்; பயன்மிகு பயணமாக ஆக்கிக்கொள்ளலாம்; ஆட்களை அடியோடு சாய்க்கப் பயன்படுத்தலாம்; ஆரோக்கியமாக மாற்றி ஆயுளை விருத்தி செய்து கொள்ளலாம். புகழாக ஆக்கிக்கொள்ளலாம். இப்படி ஒரு மூலப்பொருள் உலகில் எங்காவது இருந்தால் தயவுசெய்து அடையாளம் காட்டுங்கள். இனி உங்கள் செயல் எது வாயினும் அதற்காக எவ்வளவு நேரம் செலவிட்டாலும் அதை உங்கள் நிமிட வருமானத்தால் பெருக்குங்கள். ஈடுபட்ட காரியம், செலவழித்த நேரம் பெருக்கலில் வந்த விடையைவிட உயர்வானதாக மதிப்புமிக்கதாக இருக்கவேண்டும்.

ஒன்றை நினைவில் கொள்ளுங்கள். இந்த உலகம் நம்மைப் பொருளாதார அளவுகோலால்தான் அளந்து பார்க்கிறது. ‘‘இவரு ரொம்ப நல்லவருங்க’’ என்றால் ‘‘அது கிடக்கட்டும். இவருக்கு என்ன தேறும்?’’ என்றல்லவா கேட்கிறது?.




ஓர் உல்லாசப் பயணம் போகிறீர்கள்; ஒரு முக்கியமான தொழில் விஷயமாக ஒருவரைச் சந்திக்கிறீர்கள்; ஒருவரைப் பார்த்து விண்ணப்பம் ஒன்றை நீட்டி ஒரு செயலை முடிக்க நினைக்கிறீர்கள்.

''பயண ஏற்பாடெல்லாம் ஒண்ணுமே சரியில்லை'' என்று கேலி செய்கிறது உங்கள் தலைமையில் பயணித்த உல்லாசக் கும்பல். ''என்ன சார்! தொழில் பேச வர்றீங்க, ஒரு முன்னேற்பாட்டோட வரவேண்டாமா?'' என்று கடுப்படிக்கிறார் அந்தத் தொழிலதிபர். ''அந்த விவரம் இல்லாம நான் எப்படி உங்களுக்கு உதவ முடியும்?'' என்று கேலிச் சிரிப்பும் இளக்காரச் சிரிப்புமாகச் சிரிக்கிறார் விண்ணப்பத்தைக் கையில் வாங்கிக் கொள்ளாமலேயே. இவையெல்லாம் ஏன் நிகழ்கின்றன தெரியுமா? இதற்கென ஒரு நிமிடத்தையேனும் முன்கூட்டியே ஒதுக்காததுதான்.

உல்லாசப் பயணமா? உடனே அதை முன்கூட்டியே மனக்கண்ணால் பயணித்துப் பார்த்துவிடவேண்டும். வாகனம் என்ன? யாரை எங்கு அழைத்துக்கொள்ளவேண்டும்? வாகனத்தில் என்னென்ன இருக்கவேண்டும்? போய் இறங்கும் இடத்தில் என்ன கிடைக்காது? எது இருந்தால் நல்லது? வருகிறவர்களின் வயது, இரசனைகள் எப்படி? அவர்களுக்கு இரசனைத் தீனி எப்படிப் போடுவது? நிகழ்வை எப்படிக் கலகலப்பாக்கலாம்? இதில் குற்றங்குறை கண்டுபிடிக்கிற நபர் யார்? இவரை எப்படிப் பொறுப்பைக் கொடுத்து உள்ளே இழுத்துப் போடலாம் என்றெல்லாம் சில சுடச்சுடக் கேள்விகளை மனத்திற்குள் எழுப்பினால் ''இந்த டூரை மறக்கவே முடியாமப் பண்ணீட்டிங்க அங்கிள்'' என்று டீன்ஏஜுகள் சான்றிதழ் தரும். இந்தச் சான்றிதழின் பின்னணியில் சிறுசிறு குறைகள் இருந்தாலும் அவை மறக்கப்படும்.

தொழில் தொடர்பான நபர் என்னென்ன கேள்வி கேட்பார்? என்னென்ன நீட்டினால் அவரை அசத்தலாம்? என்ன உடை அணிந்தால் நம்மைப் பற்றி அவருக்கு நல்லபிப்ராயம் வரும்? எதில் நமக்குத் தெளிவு தேவை? ஒரே ஒரு நிமிடம் மனத்திற்குள் நடக்கப் போகிறவற்றை திரைப்படமாய் ஓட்டிப் பாருங்கள். சட்டுச் சட்டென்று பல விஷயங்கள் தோன்றும்.

விண்ணப்பம் நீட்டும்போது அவர் நெஞ்சைத் தொடுகிற மாதிரி என்ன பேசவேண்டும்? அவர் கேட்கும் எது எதற்கெல்லாம் நாம் தயாராக இருக்கவேண்டும் என்கிற ரிகர்சலை ஒரு நிமிடம் ஓட்டிப் பார்த்துவிட்டால் நல்லது நடக்கும். பல உன்னத விஷயங்கள் சிறு ஓட்டைகளால்தான் பறிபோகின்றன. முக்கியத் தருணத்தில் நாம் செய்கிற இந்த ஒரு நிமிடச் செலவு, செலவே அல்ல. சரியான முதலீடு.

இந்த ஒரு நிமிட முன்னோட்டம் பல நேரங்களில் பளீர் பளீர் என்று யோசனை கூறும்.

பிரச்னைகளைச் சந்தித்த பிறகே சிந்திக்கிறவர்கள் இரக்கத்திற்குரியவர்கள்.

முன்னதாகவே இந்தச் சிந்தனையை விதைக்கிறவர்கள் சாதனையாளர்கள்..




ஒரு நிமிடம் என்பது ஒரு நிமிடமில்லை!
''Just a Minute sin'' என்கிறார்கள் சில நிறுவனங்களில்; பொது இடங்களில். ஆனால் நம்மை இவர்கள் காக்க வைப்பதோ பல நிமிடங்கள்.

ஒரு நிமிஷம்னு சொல்லிட்டு எவ்வளவு நேரம் காக்க வைச்சீங்க என்று நம்மால் குதிக்கவோ கோபித்துக் கொள்ளவோ முடிகிறதா? ஏன் நாமே கூட வீட்டிற்கு வந் திருப்பவர்களிடம் ‘இதோ ஒரு நிமிஷத்துல வந்துடறேன்’ என்று சொல்லிவிட்டு, வரவேற்பறையில் பல நிமிடங்கள் அவர்கள் மோட்டு வளையத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும்படி உட்கார வைத்து விடுகிறோம். ஏன் இப்படி?

“இதைப் படிச் சிட்டுக்கிட்டிருங்க; இந்த ஆல்பத்தைப் பாருங்க; தொலைக் காட்சியில நீங்கள் விரும்பிப் பார்க்கிற சேனல் எது? போட்டுவிட றேன். பார்த்துக் கிட்டிருங்க. ஒரு சிறு வேலை முடிச்சுட்டு வர்றேன் என்று, ஏன் ஒரு தெளிவில்லாத கால கட்டத் தைச் சொல்லக் கூடாது? சரி, ஒரு நிமிடம் என்றோமே, அதன்படி ஏன் சென்று அவர்களுடன் சேர்ந்து கொள்ள வில்லை? நம் ஒவ்வொருவரும் ஒரு நிமிடம் என்கிற கால எல்லைக்கு வெவ்வேறு அர்த்தம் வைத்திருக்கிறோம். ‘ஒரு நிமிடம்’ என்பதையே அவர்களிடமிருந்து விலகிப் போகிற தகவலாகப் பெயருக்குச் சொல்லு கிறோமே தவிர, உண்மையில் நம் மனத்தில் இருப்பது 60 வினாடிகளோ 600 மில்லி செகண்டுகளோ இல்லை.

இதற்காக ஸ்டாப் வாட்ச் எடுத்துக் கொண்டு துல்லியமாகத் திரும்ப முடியுமா? என்று கேட்பவர்களுக்கு நான்காவது பாராவில் விடை இருக் கிறது. இந்த விஷயத்தில் என்றில்லை. ஒரு குறிப்பிட்ட நேரம், நாளைச் சொல்லிக் கடன் வாங்குகிறோம். உதவி செய்வதாக உத்தரவாதம் அளிக்கிறோம்; வேலையை முடிப்பதாக மேலிடத்தில் சொல்லுகிறோம்; காலி செய்து கொடுத்து விடுவதாக வாக்குறுதி அளிக்கிறோம். அதன்படி செய் கிறோமா என்பது மில்லியன் டாலர் கேள்வி. பெரும்பாலும் இல்லை.

எல்லாம் இந்த "ஒன் மினிட் பிளீசில்" ஆரம்பித்த பழக்க தோஷம் தான். இதைக் கொஞ்சம் வெற்றிகரமாகத் தூக்கி எறிவோமா? அதெப்படி வெற்றிகரமாகத் தூக்கி எறிவது?
வாங்கிய கடனைத் திரும்பத் தருவதற்கு நமக்கு நாமே விதித்துக் கொண்ட காலக்கெடு அடுத்த வாரம் முடிகிறதா? யாருக்குக் கடன் தர வேண்டுமோ, அவரை இன்றே போய்ப் பார்த்து விடுங்கள்; இன்றே பேசி விடுங்கள்; இன்றே கடிதமிடுங்கள். இன்றே குறுஞ்செய்தி (SMS) அனுப்புங்கள்.

சொன்னபடி தரமுடியாதுபோல் தெரிகிறது. ஒரு வாரம் கால அவகாசம் தாருங்கள்; ஒருமாதம் தாருங்கள் என்று நீங்கள் முந்திக் கொள்ளுங்கள்.

"சொன்ன தவணைப்படி இந்தாள் தரவுமில்லை; தகவலுமில்லை" என்று உரியவர் வருத்தப்படும்போது, அது கோபமாகவும் பிடிவாதமாகவும் மாறுகிறது. அதற்குப் பிறகு அவகாசம் கேட்டால், "அதெல்லாம் முடியாது. இப்பவே வச்சாகணும்" என்பார். எதிராளி குரலை உயர்த்துவதற்கு ஒரு நிமிடம் முன்னதாக நாம் முந்திக் கொண்டு விட்டால் அனைத்தும் நம் கட்டுப்பாட்டிற்குள். எப்படி நம்ம சௌகரியம்?.




எங்கள் உறவினர் பெண் ஒருவர் வந்தார். தம் கணவரைப் பற்றி வெறும் புகார்களாக அடுக்கிக்கொண்டே போனார். "இனிமேல்

கூடுதலாக இப்படி ஒரு சம்பவம் நடந்தால்கூடப் போதும் அவரோடு என்னால் குடும்பம் நடத்த முடியாது'' என்றார். ஆத்திரமும் கண்ணீருமாக கலந்து அவர் சொன்ன சம்பவங்கள் சற்றுக் கடினமாகத்தான் இருந்தன. ''அவசியம் கூப்பிட்டுப் பேசுகிறேன், கண்டிக்கவும் செய்கிறேன்'' என்றேன். கேக்கில் வெண்ணெய் மீது வைக்கிற செர்ரி பழத்தைப் போல் முத்தாய்ப்பாக ஒன்றைச் சொன்னேன்.

''உங்கள் கணவர் மீதான கோபங்களை, வருத்தங்களைக் கொட்டித் தீர்த்துவிட்டீர்கள். போகட்டும். ஆனால், இனியும் இவற்றையே நினைத்துக் கொண்டிருக்காமல் ஒரு நிமிடம், ஒரே நிமிடம் உங்கள் கணவர் உங்களிடம் அன்பாக இருந்த கணங்கள்; உங்களுக்காகச் செய்திருக்கும் நன்மைகள்; உங்கள் மகிழ்ச்சிக்காக எடுத்துக்கொண்ட முயற்சிகள், உங்களை விட்டுக்கொடுக்காமல் உங்களுக்காக வக்காலத்து வாங்கிய சந்தர்ப்பங்கள்; உங்கள் நலம் நாடி மேற்கொண்ட தியாகங்கள்; உங்கள் உடல்நலக் குறைவின்போது காட்டிய அக்கறைகள் ஆகியவற்றை நினைவிற்குக் கொண்டுவந்து, ஒரு வேகமான திரைப்படம் போல் மனத்திரைக்குள் ஓட்டிப் பாருங்கள். முடிந்தால், இந்த ஒரு நிமிடப் படத்தை அடிக்கடி ஓட்டிப் பாருங்கள்'' என்றேன். இன்று? இத்தம்பதியின் நெருக்கத்தைக் கண்டு பொறாமைப்படாத சிலருள் நானும் ஒருவன்.

நமக்கு வேண்டியவர்கள் பிடிக்காத ஒன்றைச் செய்யும்போதும் விரும்பாத வகையில் பேசும்போதும், இதைத் தான் பெரிதுபடுத்திப் பேசுகிறோம்; அதையே திரும்பத் திரும்ப பிளாஷ் பேக் போட்டுப் பார்க்கிறோம். இதோடு விடுகிறோமோ? நமக்குச் சாதகமாகப் பேசு கிறவர்களாகப் பார்த்து, ''கேளுங்க இந்த அநியாயத்தை!'' என்று புகார்ப் பட்டியல் வாசிக்கிறோம். ''என்னுள் நெருப்பு எரிகிறது; வாருங்கள், அதில் இன்னும் கொஞ்சம் எண்ணெய் ஊற்றுங்கள்'' என்று அழைப்பு விடுக்கிறோம்.

நமக்கு எதிராகவோ, நடுநிலைமையுடனோ பேசுகிற ஒருவரிடம் போய் நடந்த சம்பவத்தைச் சொல்லுகிற திராணி எத்துணைப் பேருக்கு இருக்கிறது?

என் தந்தை தமிழ்வாணன் சொல்வார். ‘‘ஒருவர் கேட்கும் 10 உதவிகளைத் தொடர்ந்து செய். பதினொன்றாவது உதவியை மட்டும் மறுத்துச் சொல். செய்த பத்தையும் அவர் மறந்துவிட்டு, மறுத்த வருத்தத்தை மட்டும் மனதில் தாங்கிப் பேசிக் கொண்டிருப்பார். இதுதான் உலகம் புரிந்துகொள்’’ என்பார். பெற்றோரோடும் உடன்பிறந்தவர்களோடும்/தொழில் பங்குதாரர்களோடும்/மிக வேண்டியவர்களோடும் கருத்து வேறுபாடு கொண்டு மனம் சலித்து நிற்கும்போது, அவர்கள் நமக்குச் செய்த நன்மைகளை மட்டும் ஒரு நிமிடம் முன்னிறுத்திப் பார்க்கக் கூடாதா? மாறாக, ஏன் இப்படிப் பின்பகுதியில் நடந்ததை மட்டும் பெரிதுபடுத்திக் கொள்ளவேண்டும்?

என் நண்பர் வீட்டிற்குப் போய் அவரை அழைத்துக்கொண்டு வெளியில் புறப்பட இருந்தேன். படுசூடாகப் பானம் தந்தார் நண்பரின் மனைவி. ‘‘அவசரமாகப் புறப்படுகிற நேரத்தில் இப்படிச் சூடாத் தர்றியே’’ என்ற நண்பர், அதை ஒரு நிமிடம் ஃப்ரிஜ்ஜிற்குள் வைத்துப்பிறகு எடுத்துக்கொடுத்தார். நான் சொன்னவற்றுடன் இந்த பிரிஜ் சமாசாரத்தையும் கொஞ்சம் முடிச்சுப் போட்டுப் பாருங்களேன்




புகழ்மிக்க அடுத்த வீட்டுக்காரர்கள் என்கிற பட்டியலை எடுத்தால் அதில் தாமஸ் ஆல்வா எடிசன் _ஹென்றிபோர்டு ஆகியோரை அவசியம் குறிப்பிடவேண்டும்.

பிளாரிடாவில் இருவர் வீட்டிற்கும் இடையில் காம்பவுண்டுச் சுவர்கூட இல்லை என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்.
தாமஸ் ஆல்வா எடிசன் என்றால், பலரும் மின்விளக்கை மட்டுமே கண்டுபிடித்ததாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.
ஆனால் உலகில் ஒரு தனி மனிதர், மனிதகுலத்திற்கென்று அதிகமான கண்டுபிடிப்புகளை மேற்கொண்டு தந்திருக்கிறார் என்றால், அவர் எடிசன் மட்டுமே.
ஹென்றி போர்டு உலகப் புகழ்பெற்ற போர்டு கார்களை உருவாக்கியவர்.

இந்த இருவரும் தினமும் காலையில் ஒன்றாகத்தான் வாக்கிங் போவார்கள். ஆனால் ஒருவர் மற்றவருடன் திடீரென்று ஏதும் பேசவேண்டும் என்று நினைத்துக்கொண்டால், உடனே கதவைத் தட்டிவிடுவார்களாம். மேலைநாட்டில் இது வழக்கமில்லை. அடுத்த வீடு என்றாலும் அப்பாயின்ட்மென்ட் வாங்கவேண்டும்.
ஒருமுறை திடீரென போர்டு, கதவைத் தட்டிப் பேசப் போக, போர்டு சங்கடப்படும்படி எடிசன் ஏதோ சொல்லிவிட்டாராம்.

என்னதான் நட்பின் உரிமை இருந்தாலும் எடிசனுடைய மனநிலை, சூழ்நிலை புரியாமல் நான் பேசியது தவறு என்று போர்டு தம் மனைவியிடம் குறிப்பிட்டாராம்.

இந்தவார ஒரு நிமிட சமாசாரம் இதைச் சுற்றியதுதான்.
எந்த ஒரு வருடன் நாம் பேச நேர்ந்தாலும் சரி, அந்த நிமிடத்தை நாடி பிடிக்கும் நேரமாக வைத்துக்கொள்ளுங்கள்.
ஆம்! டாக்டரிடம் உடல்நலக் குறைவைச் சொன்னதுமே நாடி பிடிக்கிறார் அல்லது ஸ்டெத் வைக்கிறார் அல்லவா?
அதுபோலத்தான் இதுவும்.

'நானே ஒரே சோகத்துல இருக்கேன். இவன் வேற வந்து சூழ்நிலை புரியாம வெறுப்பேத்துனான். புடிச்சு நல்லாத் திட்டிவிட்டுட்டேன்'' ஒன்று ஒருவர் சொல்வாரேயானால் சற்று ஊகியுங்கள். திரைக்காட்சியாக, என்ன நடந்திருக்கும் என்று கற்பனை செய்யுங்கள்.
ஒரு தொழில் பேச்சை எடுக்கறோம். கடன் கேட்கப் போகிறோம்; ஏதோ விண்ணப்பம் நீட்டுகிறோம்; சிபாரிசு செய்யச் சொல்கிறோம்; ஒரு திருமணப் பேச்சை எடுக்கிறோம் என்றால், எதிராளி என்ன மனநிலையில் இருக்கிறார் என்று பார்க்க வேண்டாமா?
''எப்படிச் சௌக்கியமெல்லாம்?''

''என்னத்தைச் சொல்றது போங்க! சரி சரி, நீங்க வந்த விஷயத்தைச் சொல்லுங்க.''

''இல்லை. அப்புறமா வந்து பார்க்கிறேன்'' என்று எழுந்துவிட்டால், அது புத்திசாலித்தனம்.

நமக்குக் காரியம் ஆகவேண்டுமானால், ஏதும் ஒன்றைச் சாதித்துக்கொள்ளவேண்டுமானால், எடுத்த எடுப்பில் விஷயத்திற்குப் போகவே கூடாது. பத்தாயிரம் அட்வான்ஸ் வேணும் என்று முதலாளியின் மூடு தெரியாமல் கேட்கக்கூடாது. ஒரு நிமிட உரையாடலிலேயே நாடி பிடித்து, இதுதான் தருணம் என்றோ, ஊகும்! வந்த நேரம் சரியில்லை என்றோ

தீர்மானிக்கிறவர்களே சாதிக்கிறவர்கள். மற்றவர்கள்? ஊகும்! என் வாயால் சொல்வானேன்?.




தேர்தல் நேரத்து அரசியல்வாதியைப் போலத்தான் பலரும் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். காலை 11.00க்கு ஆர்.எஸ்.மங்கலத்தில் கூட்டம் 12.30க்கு தேவகோட்டை. 2.30க்கு அமராவதி புதூர். 3.15க்கு செஞ்சையில் என்று வேகமாக நகர்ந்துகொண்டிருக்கும் வேட்பாளர் போல இந்த இயந்திர வாழ்வையே வாழும் முறையாக ஆக்கிக்கொண்டுவிட்டவர்கள் பலர்.

வீட்டில் காலை உணவு சாப்பிடும்போது வாகனம், பெட்ரோல் நிரப்பல், போக்குவரத்துச் சிக்கல் பற்றிய நினைப்புகள். போக்குவரத்தில் அலுவலக நினைப்புகள்; அலுவலகத்தில் வேறு ஏதோ நினைப்புகள் என்றுதான் பலரது பொழுதுகள் ஓடுகின்றன. சாப்பிடும்போது அனுபவித்துச் சாப்பிடுவது இல்லை. "இன்று இட்டலி மல்லியப் பூவா இருக்கு. சாம்பார் பிச்சிட்டே போ!" என்று நான்கு நல்வார்த்தைகள் சொல்லத் தோன்றாததற்குக் காரணம் நாம் அடுத்த நிமிடத்திற்குத் தாவிவிடுவதுதான்.

நடந்துபோகிறவர்களின், பேருந்திற்காகக் காத்திருப்பவர்களின் நிலைமையைப் பார்க்கும்போது ஓரளவு நம் கட்டுப்பாட்டிற்குள் உள்ள நம் பயணம் எவ்வளவு சௌகரியமானது; இசை கேட்டுக்கொண்டு வசதியான காரில் போகும் இந்த நிலைக்காக நாம் எவ்வளவு பாடுபட்டிருக்கிறோம் என்று அந்த நிமிடத்தை அனுபவிப்பார்கள் எத்துணைப் பேர்?

“சே! என்ன அவதிப்பா இந்தப் போக்குவரத்து? நிக்கிற சிக்னல் விழுந்தும் நகராமல் ஆள் ஏற்றுகிறதே இந்த ஷேர் ஆட்டோ? இவர்களையெல்லாம் கேட்பாரே கிடையாதா? என்று எரிச்சலால் இதயத்தை நிரப்பிக்கொள்கிறவர்கள் கொஞ்சமா நஞ்சமா? அலுவலகம் போனால் அந்த வேலையை, கடமைகளை அனுபவித்துச் செய்யாமல் நாளையச் சொந்த வேலைகளையும் வாரக்கடைசி இனி மைகளையும் சுமந்துகொண்டு திரிந்தால் டோஸ் விழாமல், லாஸ் வராமல் என்ன செய்யும்? அப்புறம்? அப்புறம்? என்கிற நினைப்பால் அவதிதானே தவிர வேறு எதுவும் மிஞ்சாது. அடுத்த நிமிட அவதி வந்துவிட்டால் இந்த நிமிடத் தவறுகள் அதிகமாகிவிடும்.

ஒருவன் சாதனையாளனாக விரும்பினால் அவன் ‘அந்த நிமிட’ மனிதனாக விளங்கவேண்டும். நாளை என்பது செக் போல. நேற்று என்பது காலாவதியான லாட்டரி சீட்டுப் போல. இன்று என்பது கரன்ஸி போல. இந்த நிமிடம் என்ன செய்யவேண்டுமோ, அது சரியாக நடந்து கொண்டிருக்கிறதா என்று பார்க்கவேண்டும். நுனிக்கிளையில் உட்கார்ந்து கொண்டு அடிக்கிளையை வெட்டும் முட்டாள் தனத் திற்கும் அடுத்த நிமிட நினைப்புடனே வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்க்கைக்கும் பெரிய வேறுபாடு இல்லை. அடுத்த நிமிட நினைப்புக் கூடாது என்பதா? இது என்ன வறட்டு வாதம்? அப்படியானால் திட்டமிடல் என்பதற்கே அர்த்தமில்லாமல் போய் விடுமே என்கிறவர்களுக்குச் சில வார்த்தைகள்.
இந்த நிமிடக் கடமை சரிவர நிகழ்கிறது என்கிற நிறைவு முதலில் வரட்டும். இதன்பிறகு அடுத்த நிமிடத்தைத் திட்டமிடலாம்..




நம்மில் பலருக்கு ஒரு நிமிடம் என்றால் ஒரு நிமிடம்தானே? இதெல்லாம் ஒரு பெரிய நேரமா என்று மனத்திற்குள் எண்ணம் இருக்கிறது.

ஒரு நிமிடத்திற்குள் உலகில் எத்துணை எத்துணை விஷயங்களோ நடந்து முடிந்துவிடுகின்றன. பல அரிய விஷயங்கள் நிகழ்த்தப்பட்டு விடுகின்றன.
நம்ம (?) பில்கேட்ஸ் இந்த ஒரு நிமிடத்தில் 14,560 ரூபாய் சம்பாதித்து ஒதுக்கிவிடுகிறார். இத்தனைக்கும் இந்த வருமானம் வருமானவரிப் பிடித்தம் போக என்கிறார்கள். கலிபோர்னியா மாநிலத்தில் 100 ரூபாய் சம்பாதித்தால் 40 ரூபாய் வரியாகவே போய்விடும்.

ஒரு நிமிடத்தில் உலகில் 245 குழந்தைகள் பிறந்து விடுகின்றன. ஒரு நிமிடத்திற்கு ஒருவர் வீதம் காசநோயால் தாக்கப்படுகிறார்.இப்படியாகப் பல நிகழ்வுகள், எவருக்கும் எதுவும் காத்திராமல் அவைபாடு நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான். ஆனாலும் சற்று அழுத்திச் சொல்ல வேண்டியிருக்கிறது. விநாடிகளால் ஆனவை நிமிடங்கள். நிமிடங்களால் ஆனவை மணித்துளிகள். மணித் துளிகளால் ஆனவை நாட்கள். நாட்களால் ஆனவை வாரங்கள். வாரங்களால் ஆனவை மாதங்கள். மாதங்களால் ஆனவை வருடங்கள். இந்த வருடங்களின் சேர்க்கைதானே நம் வாழ்க்கை.

ஆக, நிமிடத்தை வீணாக்கினாலும் வாழ்க்கையை வீணாக்குகிறோம் என்றுதானே பொருள்.
நம் வருமானத்தைக் கணக்கிட்டு ஒரு நிமிடத்தின் வருமானத்தைத் தெரிந்து வைத்துக்கொள்ளுங்கள் என்று, சில வாரங்களுக்கு முன்பு இதே தொடரில் குறிப்பிட்டு எழுதியிருந்தேன்.

அந்த ஒரு நிமிடத்திற்கு உரிய காசைக் குப்பையில் வீசுங்கள் என்று எவராவது சம்மதிப்போமா?

'சிவாஜி' படத்தை எத்தனையோ முறை பார்த்தேன் என்று ஒருவர் பெருமை பிடிபடாமல் பேசினார். எனக்கு இவரைப் பார்த்து இரக்கப்படத் தோன்றியதே தவிர, வியக்கத் தோன்றவில்லை. வாழ்க்கைக்குப் பொழுதுபோக்கும் அவசியம்தான். ஆனால், பொழுது போக்குவதையே வாழும் முறையாகக் கொண்டுவிட்டவர்களைப் பார்த்து இரக்கப்படத்தானே முடியும். ஒரு பணக்கார இளைஞரிடம் பேசிக்கொண்டிருந்தேன். 'எனக்கு நான்கு தலைமுறைக்கு தாங்குமளவிற்குப் பணம் இருக்கிறது. நான் கடுமையாக உழைக்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை' என்று பீற்றிக்கொண்டார்.

இருக்கலாம். ஒப்புக்கொள்கிறேன். ஆனால், என் தாத்தாக்கள் சம்பாதித்து வைத்ததை என் தந்தை சும்மா இருந்தே அழித்தாரே தவிரப் பெருக்கவில்லை என்று உங்கள் வாரிசு பேசும்படி வைத்துவிடாதீர்கள்.

உங்களுக்கு ஏகப்பட்டது தேறும். சரி. ஆனால், நீங்கள் என்ன சாதித்தீர்கள் என்று இந்த உலகம் ஒரு தராசுத் தட்டைக் கையில் எடுக்கும்போது, அதற்குப் பதில் சொல்லத் தயாராகுங்கள் என்று நளினமாகச் சுட்டிக்காட்டினேன்.

மனத்திற்குள் ஏதோ பளீர் என மின்னல் வெட்டியதைப் போல் அவர் முகம் பிரதிபலித்த மாதிரி தோன்றியது..




இப்படி அவர் மண்டைப் போடாகப் போட்ட பிறகு ஆசைதான் துன்பங்களுக்குக் காரணம் என்கிற புத்தரின் போதனையையும், 'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்கிற நம் சான்றோரின் வாக்கையும் வைத்து இவரை வாதத்தில் வென்றுவிட முடியும் என்கிற நம்பிக்கை எனக்குப் போய்விட்டது. நம்ம ஆளுங்க ஒண்ணு சொன்னாங்கணா சும்மா நச்சுன்னு சொல்லுவாங்க! வீணான வார்த்தைகளே கிடையாது. இந்த லேனா அண்ணனோட வார்த்தைகள் படிக்க நல்லா தான் இருக்கும். ஆனா....

போட்டி போட்டின்னு ஓடியே வாழ்க்கைய தொலைச்சு ஒக்காந்திருக்கிற நிறைய மனிதர்களைப் பார்த்திருக்கிறேன். போட்டி போடுவது வளர்ச்சியாகாது. எதையும் ஸ்போர்ட்டிவா எடுத்துக்கிறது தான் வளர்ச்சி.




இந்த நிமிடம் நீங்கள் என்ன மனநிலையில் இருக்கிறீர்கள் என்பதை நீங்கள் அறிவீர்களா? ‘‘ஏன்? எனக்கென்ன? நன்றாகத்தான் இருக்கிறேன்.’’ அல்லது ‘‘ஏன்! இயல்பாகத்தான் இருக்கிறேன்’’ என்பீர்கள். ஆனால், நான் இதை மறுக்க வேண்டியவனாக இருக்கிறேன்.

தேங்காயைப் பக்குவமாக உடைப்பவர்கள், அதை மூன்று முறை உருட்டி உருட்டித் தட்டுவார்கள். அந்தத் தேங்காயை ஒருவரிடம் கொடுத்து, ‘‘இது நன்றாகத்தானே இருக்கிறது? உடைக்கிற மாதிரியா இருக்கிறது?’’ என்று கேளுங்கள். பார்த்துவிட்டு, ‘‘ஆம், நன்றாகத்தானே இருக்கிறது! ஒரு கீறல் கூட இல்லையே?’’ என்பார்கள்.

அவர்கள் கண்ணெதிரேயே ஒரு விளிம்பில் இலேசாகத் தட்டுங்கள். தேங்காய் உடனே வாய் பிளக்கும். ‘‘நான் நன்றாக _ இயல் பாகத்தானே இருக்கிறேன்?’’ என்று சொன்னதற்கும் இதற்கும் பெரிய வேறுபாடு இல்லை.

இந்த நிமிடம் நாம் என்ன மனநிலையில் இருக்கிறோம் என்பதை ஒரு சிறிய அளவுகோலின் மூலம் நாமே தெரிந்து கொண்டு விட முடியும்.

அபரிதமான மனநிலை
மகிழ்ச்சியான ’’

இயல்பான ''
சஞ்சலமான ''
கவலைமிகு ''
விரக்தி ''

இந்த ஆறினுள் ஒன்றின் பிரிவில்தான் ஒருவரது இந்த நிமிட மனநிலை அடங்கியாக வேண்டும். வேண்டுமனால் சிறுசிறு உட்பிரிவுகளை இது உள்ளடக்கியிருக்கலாம். இவற்றிற்குள் இப்போது நுழைய வேண்டாம்.

காலையில் வெள்ளந்தியாக இருக்கும் மனிதர்கள், நாள்தோறும் நடக்கும் சம்பவங்களால் தாக்கமடைகிறார்கள். மனம் இந்த ஆறினுள் ஒன்றை நோக்கி நிமிடத்திற்கு நிமிடம் அலைக்கழிக்கப்படுகிறது.

ஒன்றின் தாக்கத்தில் இருக்கும்போது சில நேரங்களில் இதை எப்படிக் கையாள்வது என்பதே தெரியாமல் போகிறது. முட்டாள்தனமான முடிவுகள்; உணர்ச்சிபூர்வமான முடிவுகள் ஆகியவற்றை ஒருவர் எடுக்க நேரிடுவது இதனால்தான். எல்லாம் கோளாறாக ஆன பிறகு, 'நானா இப்படி எடுத்தேன்? இப்படி ஏன் குழம்பிப் போனேன்?' என்று நம்மை நாமே கேட்டுக் கொள்ள நேரிடுவது இதனால்தான்.

நாம் எடுக்கும் முக்கியமான முடிவுகளின் விளைவுகளே நம் வாழ்க்கையின் சாதனைகளையும், வேதனைகளையும் நிர்ணயிக் கின்றன.

அன்றாடம் எது நடந்தாலும் முடிந்தவரை இயல்பான மனநிலைக்கும் மகிழ்ச்சியான மனநிலைக்கும் திரும்பிவிடுங்கள், ரப்பர் பாண்டின் இயல்பைப் போல், ஆம்! இந்த நிமிட மனநிலை இந்த இரண்டினுள் ஒன்றாகத்தான் இருக்க வேண்டும் என்பது மிக முக்கியம்!

அது சரி, நீங்கள் இந்த நிமிடம் என்ன மனநிலையில் இருக்கிறீர்கள்?.




மனிதன் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் குளிர்சாதனம் பொருத்தப்பட்ட அறையில் இருக்க விரும்புவான். ஆனால் இரும்பு தயாராகும் இடத்தில் ஒரு நிமிடம் கூட இருக்க விரும்பமாட்டான்.

உணர்ச்சிகள் விஷயத்தில் இப்படித்தான். மகிழ்ச்சியான நிமிடங்களை மிகவும் விரும்பும் மனிதன், கோபமான உணர்ச்சியில் வெகுநேரம் இருக்க விரும்புவதே இல்லை. கோப உணர்ச்சியும் இப்படித்தான். ஆம்! எல்லாருடைய உண்மையான கோபமும் 'ஒரு நிமிடம்' தான்.

எதிராளியின் பிரதிபலிப்புத்தான் அந்தக் கோபத்தின் காலகட்டத்தை நீட்டிக்கச் செய்கிறது.
'என்னடி! நெனச்சிக்கிட்டிருக்கே உன்மனசுல? பெரிய மகராணின்னு நினைப்பா?' என்று ஒரு கணவர் ஆரம்பிக்கிறார் என்றால், பொங்குகிற பாலில் தண்ணீர் தெளித்து அதை அடக்குகிற கதையாய், 'அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லீங்க. தயவு செஞ்சு

கோபப்படாதீங்க' என்று சூட்டைக் குறைக்கிற வார்த்தைகளைத் தெளித்தால், கணவன் அடங்கிய பாலாகிவிடுவான்.
எல்லா கணவன் மனைவிக்கும் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஒரே நேரத்தில் இருவரும் கோபப்படவே கூடாது. அந்த நிமிடம் அப்படியே விட்டுவிட வேண்டும். 'எவ்வளவு வேண்டுமானாலும் கத்து. நான் ஒன்றும் பேசப்போவதில்லை. நீ அடங்குவேல்ல! அப்ப வச்சுருக்கேன் உனக்கு' என்று அந்த நிமிடம் ஒரு கணவன் அடங்குவானேயானால் அவன் புத்திசாலி.
இருவரும் ஒரே காலகட்டத்தில் கோபப்படும்போதுதான் வார்த்தைகள் தடிக்கன்றன. கைகள் நீளுகின்றன. ஏன் இன்னும்கூட விபரிதமாகவெல்லாம் ஏதோ நிகழ்ந்துவிடுகின்றன.
ஆத்திரக் கணத்தில் வரும் வார்த்தைகளுக்கு அர்த்தமில்லை. அவற்றை உண்மையான அகராதி கொண்டு மொழி பெயர்க்கக் கூடாது. அடங்கியபின் வரும் வார்த்தைகளே அர்த்தமுள்ளவை. கோபம் எனும் மதுவைப் பெருமூளையில் ஏற்றிக்கொண்டவர்கள் பிதற்றத்தான் செய்வார்கள்.

ஒருவர் சூடேறுவதும் சூடு இறங்குவதும் ஒரு நிமிடத்தில்தான். 'கோபம் வரும்போது மனதை திசை திருப்பி ஒன்று, இரண்டு, மூன்று என்று முடிந்தவரை எண்ணுங்கள். உங்களுக்கே நம் கோபம் அடங்கிவிட்டது என்று தோன்றும்வரை எண்ணுங்கள்' என்று உளவியல் நிபுணர்கள் ஆலோசனை கூறுகிறார்கள். இப்படி எண்ணிப் பார்த்தால் 60க்குமேல் உங்களால் எண்ண முடியாது. ஆமாம், உங்கள் கோப உணர்ச்சியெல்லாம் ஒரு நிமிடம்தான். கோப உணர்ச்சியில் மனம் திளைப்பதே இல்லை. அதிலிருந்து மனம் வெளிவரவே விரும்புகிறது. ஆனால் எதிராளியின் சில சொற்களும், செயல்களும் அந்தக் கோபத்தைப் புதுப்பிக்கின்றன. நம்மீது பாய்ந்து வருகிறவரின் கோபத்தைச் 'சாரி' என்கிற ஒரு வார்த்தை பாதியாக்குகிறது. பதிலாகச் சொல்லப்படும் எரிச்சலூட்டுகிற சில வார்த்தைகளோ அவரது கோபத்தைப் பன்மடங்காக்குகிறது.

கோப உணர்ச்சியில் இருப்பவர்களுக்கு எந்த நியாயமும் புரிவதில்லை. கோப உணர்ச்சியிலிருந்து வெளிக்கொணர்ந்த பிறகு எடுத்துச் சொன்னால்தான் தலைக்குள் ஏறுகிறது.

உங்களுக்குக் கோபம் வந்தாலும் சரி, பிறர் கோபத்திற்கு ஆளானாலும் சரி அந்த ஒரு நிமிடத்தை சரிவரப் பயன்படுத்திக்கொண்டால் நீங்கள் நிச்சயம் நினைத்ததைச் சாதிப்பீர்கள்.!.




ஒரு தனியார் பொறியியல் கல்லூரியின் முதல்வர் கெட்டிக்காரர். நல்ல நிர்வாகி. ஆனால், நற்பெயர் என்பது இவருக்கு அறவே கிடையாது.

இவரது சாதனைகளும் வெற்றிகளும் மறக்கப்படும்படியும், புறக்கணிக்கப்படும்படியும் போவதற்கு என்ன காரணம் என்று தெரிந்தால் உங்களுக்குச் சற்று வியப்பாக இருக்கும்.
ஏன்? என்னவாம்? என்கிறீர்களா? எல்லா வற்றையும் நல்லபடி செய்து முடித்து விட்டு கடைசி நிமிடம், உரியவர்களிடம், “உங்களுக்குப் போய் இதைச் செய்தேனே!” என்கிற பாணியில் பேசிவிடுவார். அல்லது “உங்களால்தான் இதை இப்படிச் சாதிக்க முடியும்!” என்று மற்றவர்கள் பாராட்டுமுன் இவரே சுயதம்பட்டம் அடிக்க ஆரம்பித்துவிடுவார். பாராட்ட முன் வருபவர்கள்கூட உடனே வாயில் பிளாஸ்திரி ஒட்டிக்கொண்டு விடுவர்.

தாய்தகப்பனை இழந்த ஒரு குடும்பம். மூத்தவர், தமக்குப் பிறகு பிறந்த அனைவருக்கும் எல்லாம் செய்வார். ஆனால் எல்லாம் முடியும் தறுவாயில் அவர்களைப் பிடித்து ஏதேனும் ஒரு குறையைக் கண்டுபிடித்து வாங்கு வாங்கு என்று வாங்கிவிடுவார். இவர் முன்னின்று நடத்தி வைத்த கடைசித் தங்கையின் திருமணத்தில் கூடத் தேவையில்லாமல் சம்பந்தி வீட்டாரிடம் இப்படி வாயைக் கொடுத்தார். இதனால் திருமணம் செய்து வைத்ததற்கான நற்பெயர் இவருக்குக் கிடைக்காமலே போய்விட்டது.

நன்கு கடனுதவி செய்துவிட்டு அதைத் திரும்பப் பெறும் நேரத்தில் வாங்கியவர்களின் மனம் புண்படும் படி பேசி, ஏண்டா இவரிடம் உதவி கேட்டோம் என்று நொந்து கொள்ளும்படி செய்து விட்டார்.

இப்படிக் கடைசி நிமிடக் கெட்டபெயர் என்பது பலரது பழக்கமாகவே மாறிவிட்டது. ஏனோ இதை இவர்கள் உணர்வதே இல்லை.

எல்லா நன்மைகளையும் செய்துவிட்டு, எல்லாக் காரியங்களையும் திறமையுற ஆற்றிவிட்டுக் கடைசி நிமிடம் இப்படிக் கெட்ட பெயர் எடுக்க வேண்டுமா?

கடைசி நிமிடம் என்பது பல்லைக் கடித்துக் கொண்டு பொறுமை காக்க வேண்டிய முக்கிய நிமிடம்.

‘இந்த விஷயத்தில் நான் எவ்வளவு கஷ்டப்பட்டேன் தெரி யுமா! எவ்வளவு செலவழித்தேன் தெரியுமா? எவ்வளவு பாடுபட்டும் பலனில்லை’ என்று புலம்புவதும் புத்திசாலித்தனமல்ல.
நன்கு முடியும் தறு வாயில் கை நழுவிப் போய்விட்டது என்று கதறுவதும், புலம்புவதும் கூட இவர்களது வாழ்வில் நடக்கும். ஒன்றைச் சாதிக்க நினைக்கிறவர்களுக்கு அரைகுறை அணுகுமுறையே கூடாது. எங்கு ஆரம்பித்தோமோ, அதே

ஆரம்பத்தில் கொண்டு வந்து அதன் பின் முனையைத் தொட வைக்காமல் போனால், அதற்குப் பெயர் முழு வட்டமாகாது. உதை பந்தை, கோல் அருகே கொண்டு வந்துவிட்டு கடைசி நிமிடம் எதிர்த் திசையில் உதைக்கிறவர்களைப் பார்த்தால், இரக்கப்படவே தோன்றுகிறது..




தொலை பேசியில் அழைத்து நம்மைச் சாமானியத்தில் விடாமல், பிடிபிடி என்று பிடித்து விழிபிதுங்க வைப்பவர்கள் உண்டு. இருபது நிமிடங்களுக்குக் குறைந்து முடிக்க மாட்டார்கள். வளவள என்று சம்பந்தமில்லாத விஷயங்களை விவரிப்பார்கள். மேடைப் பிரசங்கம் போல அரைமணி நேரம் தங்களது சொந்தக் கதையைச் சொல்லி சோகத்தைப் பிழிபவர்கள் உண்டு.

அலுவலகத்தில் உடன் பணிபுரிபவர்களில் சிலர் கூட நம் அவசரமும் அவதியும் புரியாமல் எதிர் இருக்கையில் அமர்ந்து கொண்டு நம் நேரத்தை விழுங்குவது உண்டு. இவர்களையெல்லாம் எப்படிச் சமாளிப்பது? ‘ஒரு நிமிட’ உத்திதான்.

நல விசாரிப்புகளை முடித்துக் கொள்ளத்தான் அந்த ஒரு நிமிடம். தொலைபேசி என்றால், ‘ஏதும் அவசரமா? நான் அழைக்கவா?’ என்று கேட்டு, சம்மதம் பெற்றுத் தொலைபேசி தொடர்பைக் கையோடு துண்டிக்க வேண்டும்.

''நாம் தொலைபேசியில் அழைத்தால் நமக்கல்லவா செலவு?' என்று கேட்பவர்களுக்கு ஒரு வார்த்தை. நாம் பணத்தைச் சம்பாதித்து விடலாம். நேரத்தை மட்டும் இழந்தால் இழந்ததுதான். நாம் தேடிப்போகும் போதும், நாம் தொலைபேசியில் அழைக்கும்போதும் அந்தச் சந்திப்போ, அந்த உரையாடலோ எவ்வளவு நேரம் இடம் பெற வேண்டும் என்று தீர்மானிக்கிற உரிமை நமக்கு வந்து விடுகிறது.

''சரி சுருக்கமாச் சொல்லுங்க. எனக்கு இன்னின்ன வேலைகள் பாக்கி நிற்கின்றன'' என்று உரிமையோடு சொல்லலாம். ஆனால் அவர்கள் தொலைபேசியில் அழைத்து விடும்போதோ இதை நாம் அத்துணைச் சுலபமாகச் சொல்லிவிட முடியாது.

நாம் பேசும் அந்த ஒரு நிமிடம் மிக இயல்பாக இருக்க வேண்டும். எதிராளியின் மனம் புண்படாதபடி குழைவாகக் கேட்க வேண்டும். நாம் எடுத்துவிட்ட தீர்மானத்தை நாம் அவர்களின் அனுமதி யோடு எப்படியும் செயல்படுத்துவது என்கிற உறுதியும் மிக அவசியம்.

இந்த ஒரு நிமிடத்தைச் சரிவரப் பயன்படுத்தாததால் நம்முடைய எத்துணையோ முக்கிய நிமிடங்களை இந்தக் கூட்டம் விழுங்கி ஏப்பம் விட்டுவிடுகிறது.

ஒரு சிரிப்பு நினைவுக்கு வருது.

வீடு தீ பிடிக்கும் போது தீயணைப்பு நிலையத்திற்கு மிஸ் கால் கொடுத்தாராம் ஒரு மஹா கஞ்ச பிரபு.

.